14.12.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மார்க்கெட்டில் வாழைத்தார் விலை தாறுமாறு வரத்து குறைவு; தேவை அதிகம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், நேற்று நடந்த வாழைத்தார் ஏலத்தில், வரத்து குறைந்து காணப்பட்டதால், விலை உயர்ந்திருந்தது.

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டில், வாரந்தோறும் ஞாயிறு மற்றும் புதன் கிழமைகளில், வாழைத்தார் ஏலம் நடைபெறு கிறது. கோபி, உடுமலை, புதுக்கோட்டை, திருச்சி போன்ற வெளி மாவட்டங்கள்; ஆனைமலை, கோட்டூர், சேத்துமடை, நஞ்சேகவுண்டன்பாளையம், சிங்காநல்லூார், தெப்பம்பட்டி போன்ற பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளிலிருந்து மார்க்கெட்டிற்கு வாழைத்தார்கள் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. ஏலத்தில், வியாபாரிகள் வாங்கி விற்பனைக்காக கொண்டு செல்கின்றனர்.

இந்நிலையில் சந்தைக்கு வாழைத்தார் வரத்து குறைந்து காணப்பட்டது. தேவை அதிகம் இருப்பதால், விலையும் உயர்ந்து காணப்பட்டது. காந்தி மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. பூவம்பழம்-150-350 ரூபாய், கற்பூர வள்ளி-200-450 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுபோன்று, செவ்வாழை-300-800 ரூபாய்க்கும், மோரிஸ்- 100-350 ரூபாயும், நேந்திரம் ஒரு கிலோ- 20 மற்றும் கதளி கிலோ 20 ரூபாய்க்கும் ஏலத்திற்கு போனது.

**உயர்ந்தது ஏன்?**

வாழைத்தார் வியாபாரிகள் கூறுகையில்,' சீசன் இல்லாததால், வாழைத்தார் வரத்து குறைந்துள்ளது. நேற்று 1,000 வாழைத்தார்கள் மட்டுமே ஏலத்திற்கு

வந்தன. தேவை அதிகமாக இருந்ததால், விலை உயர்ந்து காணப்பட்டது,' என்றனர்.

### நாகையில் பயிர் சேதம் அதிகாரிகள் ஆய்வு

நாகப்பட்டினம்:நாகை மாவட்டத்தில், மழையால் பாதிக்கப்பட்ட சம்பா பயிர்களை, வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

காவிரியின் கடைமடை பகுதியான, நாகை மாவட்டத்தில், கடந்த ஒரு மாதமாக பெய்த கன மழையால், 2 லட்சம் ஏக்கர் சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. கீவளூர் ஒன்றியத்தில், அழுகி கிடக்கும் பயிர்களை, வேளாண் துணை இயக்குனர் கணேசன், உதவி இயக்குனர் கிருபாகரன் தலைமையிலான, வேளாண் அலுவலர்கள் பார்வையிட்டனர். ரூ.25 ஆயிரம் வேண்டும்!:சம்பா சாகுபடிக்கு, ஒரு ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளோம். கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள பயிருக்கு, ஏக்கருக்கு, 5,400 ரூபாய் நிவாரணம் என, அரசு அறிவித்திருப்பது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. அரசு மறுபரிசீலனை செய்து, ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும்.

### மழையால் குறைந்தது வரத்து காய்கறிகளின் விலை உயர்வு

ஊட்டி:நீலகிரியில், முருங்கை, பீன்ஸ், வெண்டை போன்ற காய்கறிகளின் விலை, இரு மடங்கு உயர்ந்துள்ளது. நீலகிரி மாவட்டம், ஊட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில், உருளைக் கிழங்கு, பீன்ஸ், கேரட், முட்டைகோஸ் போன்ற காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. உழவர் சந்தையில், மார்க்கெட் விலையை விட, சற்று குறைவாக உள்ளது.

**தடுப்பணை உடைந்து 500 ஏக்கர் பயிர் சேதம்**



வேலுார்:ஆற்காடு அருகே, நிரம்பி வழிந்த தடுப்பணை, நேற்று திடீரென உடைந்ததால், 500 ஏக்கர் பயிர்கள் சேதமானது. வேலுார் மாவட்டம், ஆற்காடு அடுத்த, காவனுார் அருகே வெள்ளக்குளம் மலையடிவாரத்தில், 1986ம் ஆண்டு தடுப்பணை கட்டப்பட்டது.இதன் மூலம், மலையில் இருந்து வரும் மழை நீர் சேமிக்கப்பட்டு, 1,000 ஏக்கருக்கும் மேற்பட்ட விளை நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தது. வட கிழக்கு பருவ மழை தொடர்ந்து பெய்ததால், மலையில் இருந்து தடுப்பணைக்கு, அதிகளவு நீர் வரத்து தொடங்கியது. இதனால், அணை முழுவதும் நிரம்பி வழிந்தது.கடந்த சில வாரங்களுக்கு முன், அணையில் லேசான விரிசல் ஏற்பட்டது; இதனால், தண் ணீர் கசிவு ஏற்பட்டது. இதையறிந்த வருவாய்த்துறையினர், உடனடியாக சீரமைத்தனர்.

கடந்த இரண்டு நாட்களாக, மலையில் இருந்து வெள்ளம் பெருக்கெடுத்து, தடுப்பு அணைக்கு வந்து கொண்டிருந்தது. நேற்று காலை, 8:30 மணியளவில், தடுப்பணை திடீரென உடைந்தது. இதனால், தண்ணீர் முழுவதும் வெளியேறி, சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட பயிர்கள் சேதமானது. அத்தோடு, அப்பகுதியிலுள்ள கிணறுகளும் மூழ்கின. பம்புசெட் மற்றும் மின் மோட்டார்கள் முழுவதும் நாசமடைந்தன.

## சின்ன வெங்காயம் விலை சரிவு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் அறுவடை செய்யப்பட்ட சின்ன வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால் விலை சரிவடைந்து, கிலோ ரூ.20 க்கு விற்றது. ஒட்டன்சத்திரம், சட்டையப்பனுார், கேதையுறும்பு, சாலைப்புதுாரை சுற்றி உள்ள பகுதிகளில் வெங்காயம் அதிகமாக பயிரிடப்படுகிறது. அறுவடைக்கு தயாரான மழையில் நனைந்த வெங்காயம் அதிக நாட்களுக்கு தாக்குப் பிடிக்காது என்பதால், அவற்றை பாதுகாத்து இருப்பு வைக்க முடியவில்லை. இதனால் பறிக்கப்படும் வெங்காயத்தை அப்படியே மார்க்கெட்டிற்கு கொண்டு வந்தனர். வெங்காயம் வரத்து 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்தது. இதற்கு முன்பு ஒரு கிலோ வெங்காயம் ரூ.35 க்கு விற்றது. நேற்று இதன் விலை கிலோவிற்கு ரூ.15 குறைந்து ரூ.20க்கு விற்றது. குடோன்களில் இருப்பு வைக்கப்பட்ட பழைய வெங்காயம் கிலோ ரூ.70 க்கு விற்றது.

## தொடர் மழையால் நீர் வரத்து அதிகரிப்பு :2 மாதங்களாக நிரம்பி வழியும் அணைகள்

தேனி: தேனி மாவட்டத்தில் பெய்து வரும் மழையின் காரணமாக ஏற்பட்டுள்ள தொடர் நீர்வரத்தால் இரண்டு மாதங்களாக அணைகளின் நீர் மட்டம் நிரம்பியுள்ளது. தென்மேற்கு பருவமழை முடியும் தருவாயில் அக்டோபரில் தேனி மாவட்டத்தில் மழை பெய்ய துவங்கியது. இதனால் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. அக்டோபர் 10ம்தேதி மஞ்சளாறு அணையின் நீர் மட்டம் முழு கொள்ளவை எட்டியது. (அணையின் உயரம் 57அடி). நவம்பரில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்தது. இதனால் அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தது. இதனால் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

நேற்று அணையின் நீர் மட்டம் 56.50 அடியாக இருந்தது. வினாடிக்கு 198 கன அடிநீர் வருகிறது. வரும் நீர் முழுக்க அப்படியே வெளியேற்றப்படுகிறது. சுமார் இரண்டு மாதங்களாக அணையின் நீர் மட்டம் முழு அளவில் உள்ளது.

இதே போல் பெரியகுளம் அருகேயுள்ள சோத்துப்பாறை அணை நவம்பர் முதல் தேதியில் (அணையின் முழு கொள்ளவான 126.28 அடியில்) 126.08 அடியை எட்டி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இன்று வரை 126.28 அடியாக நீர் மட்டம் உள்ளது. வினாடிக்கு 510 கன அடிநீர் வரத்து உள்ளது. வரும் நீர் முழுக்க வெளியேற்றப்படுகிறது.இந் நிலையில் நேற்று சோத்துப்பாறை அணை பகுதியில் 26 மி.மீ., மழை பதிவானதால் வராகநதி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.பல மாதங்களாக 50 சதவீத அளவில் இருந்த சண்முகா நதி அணையின் நீர் மட்டம் நவம்பர் 11ம் தேதி 52.50 அடியாக உயர்ந்தது. (அணையின் நீர்மட்டம் 52.60 அடி). வினாடிக்கு 23 கன அடிநீர் வரத்து உள்ளது. பாசனத்திற்காக 17.47 கன அடிநீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த அணையிலும் 33 நாட்களாக நீர் மட்டம் முழு அளவை எட்டி நிற்கிறது.இது தவிர வைகை அணை, பெரியாறு அணைகளிலும் நீர் மட்டம் முழு கொள்ளவை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. மழை அளவு விபரம் (மி.மீ.,ல்): தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக மழை பெய்தது. ஆண்டிபட்டி- 9.2, அரண்மனைப்புதூர்-4.8, போடி -5.2, மஞ்சளாறு -7, பெரியகுளம் -7, சோத்துப்பாறை-26, தேக்கடி -.06, வைகை அணை -3, வீரபாண்டி-2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

## கடல் நீர்மட்டம் உயர்வு மெதுவாக சுழலும் பூமி

டொரான்டோ:'கடல் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், பூமியின் சுழற்சி வேகம் குறைந்து வருகிறது' என, ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து, கனடாவின் அல்பெர்டா பல்கலை பேராசிரியர், மேத்யூ டம்பெரி கூறியதாவது: புவி வெப்பம் அதிகரித்து வருவதால், துருவப் பகுதிகளில் உள்ள பனி மலைகள் வேகமாக உருகி வருகின்றன. இதனால், கடல் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது; அதுமட்டுமின்றி, துருவங்களின் அடர்த்தி குறைந்து வருவதால், பூமியின் சுழற்சி வேகம் குறைகிறது. போதாதக்குறைக்கு, நிலவின் ஈர்ப்பு சக்தியும், பூமியை மெதுவாக சுழலச் செய்கிறது. இதனால், நாட்கள்

நீளும் நிலை உருவாகியுள்ளது. அடுத்த நூற்றாண்டிற்குள், ஒரு நாள் பொழுதில், 1.7 மில்லி நொடிகள் நீளும் என, கணக்கிடப்பட்டுள்ளது.

பருவ நிலை மாற்றம், கடல் நீர்மட்ட உயர்வு போன்றவற்றின் தாக்கத்தை கருத்தில் கொண்டு, கடலோர நகரங்களில், அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்; அதற்காக, லட்சக்கணக்கான கோடிகளை கொட்ட வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**நிரம்பி வழியும் அணைகள் 135 டி.எம்.சி., தண்ணீர் தேக்கம்**

மேட்டூர், பவானி சாகர், முல்லைப் பெரியாறு உள்ளிட்ட, 15 முக்கிய அணைகளின் மூலம், தமிழகத்தின் பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. இந்த அணைகளின் மொத்த கொள்ளளவு, 198 டி.எம்.சி., ஆகும். வட கிழக்கு பருவ மழை துவங்குவதற்கு முன், இந்த அணைகளில், 60 டி.எம்.சி., நீர் தான் இருந்தது. பருவ மழை துவங்கியதும், அணைகள் நீர் மட்டம் உயரத் துவங்கியது. தற்போது, 15 அணைகளில், 135 டி.எம்.சி., தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. மேட்டூர், பவானி சாகர் அணைகளில் மட்டுமே தேக்கி வைக்கப்பட்டுள்ள நீரின் அளவு, முழு கொள்ளளவை விட குறைவாக உள்ளது. பெரும்பாலான அணைகள் நிரம்பி, உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. அணைகள் நிரம்பியுள்ளதால், பல மாவட்டங்களின் பாசனம் மற்றும் குடிநீர் தேவை பூர்த்தியாகி உள்ளது.

**கால்நடைகளை பாதுகாக்க குடற்புழு நீக்கம் அவசியம்**

உடுமலை: நோய் எதிர்ப்பு சக்தி குறைவால், ஏற்படும் பாதிப்புகளிலிருந்து கால்நடைகளை பாதுகாக்க, மழை காலத்தில் குறைந்த இடைவெளி நாட்களில், குடற்புழு நீக்கம் செய்வது அவசியம் என கால்நடைத்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். கால்நடைகளை அதிகம் தாக்கும் நோய்களுள் குடற்புழு நோயும் ஒன்று. மாடுகளை மட்டுமின்றி, அனைத்து கால்நடைகளையுமே இப்புழுக்கள் தாக்குகின்றன. இருப்பினும், அதிகப்பட்சமாக பாதிக்கப்படுவது

மாடுகள் தான். புழுக்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் வரை, பாதிப்புகளை வெளிப்படையாக ஏற்படுத்துவதில்லை. புழுக்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில், நோயின் பாதிப்பும் அதிகரித்தே காணப்படும்.

பெரும்பான்மையான கன்றுகள், குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள எருமைக் கன்றுகள் பிறந்ததும் உடனடியாக உருண்டை புழுவின் பாதிப்புக்கு உள்ளாகின்றன. அவற்றின் சீம்பால் மற்றும் கன்று ஈன்ற முதல் இரண்டு வாரங்களில் வரும் பாலை கன்றுகள் அருந்துவதால், அதிலுள்ள புழுக்கள் கன்றுகளை நோய் தாக்குதலுக்கு உள்ளாக்கி இறக்கும் நிலைக்கு கொண்டு செல்கிறது. புழுக்களின் வகைகள்: கால்நடைகள் தட்டைப்புழுக்கள், நாடாப்புழுக்கள் மற்றும் உருண்டைப்புழுக்களால் பாதிக்கப்படுகின்றன.

நோயின் அறிகுறிகள்: குடற்புழுக்களால் பாதிக்கப்படும் கால்நடைகளின் வயிற்றில் மிகுதியான வீக்கம் ஏற்படும். உடல் எடை குறைந்து, எந்நேரத்திலும் சோர்ந்து காணப்படும். தாடையின் கீழ் பகுதியில் வீக்கம் காணப்படும். வயிற்றுப்போக்கு மற்றும் ரத்த சோகையால் பாதிக்கப்படுகிறது. சில கால்நடைகள், பால் உற்பத்தி திறன் பாதிக்கப்பட்டு பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. கால்நடைத்துறையினர் கூறியதாவது:

சாதாரண நாட்களில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும். மழை காலத்தில் இரண்டு மாதத்துக்கு ஒரு முறையும் குடற்புழு நீக்கம் கட்டாயம் செய்ய வேண்டும். குடற்புழு நீக்கத்துக்கு ஆறு வகையான தடுப்பூசிகள் போடப்படு

கிறது. தொடர்ந்து புழு நீக்கத்துக்கு ஒரே மருந்தை வழங்குவதால், புழுக்களின் பாதிப்பை குறைக்க முடியாது. சுழற்சி முறையில் ஆறு மருந்துகளையும் குறிப்பிட்ட இடைவெளியில் கால் நடைகளுக்கு வழங்க வேண்டும். கன்றுகளுக்கு தொடர்ச்சியாக ஆறு மாத காலமும், பின்னர், மூன்று மாத இடைவெளியிலும் குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

பயன்கள்: குடற்புழு நீக்கம் செய்வதனால், கால்நடைகளுக்கு சினை உற்பத்தி அதிகரிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியையும், உணவு உட்கொள்ளும் திறனையும் அதிகரிக்கிறது. உணவுகளிலுள்ள ஊட்டச்சத்தை முழுமையாக

கால்நடைகளுக்கு கொண்டு சேர்க்கிறது. மாடுகளுக்கு பால் கறக்கும் அளவை அதிகரிப்பதோடு, ஆடுகளுக்கு அதிக குட்டிகளை ஈன்றும் வாய்ப்பை வழங்குகிறது. விவசாயிகள் தவறாமல் அட்டவணையிட்டு, சுழற்சி முறையில் தொடர்ந்து குடற்புழு நீக்கம் செய்து கால்நடைகளை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு கால்நடைத்துறை ஆய்வாளர்கள் ஆலோசனை வழங்கினர்.

**சாகுபடியில் புரட்சி! ஒரே செடிக்கு மூன்றுமுறை உயிர்! வருவாயை பெருக்கும் விவசாயிகள்**



பொள்ளாச்சி: பூ, இலைகள் உதிர்ந்த பிறகும், தக்காளிச்செடிகளுக்கு உயிர் கொடுத்து, விளைச்சலை பெருக்கி விவசாயிகள் சாதித்து வருகின்றனர்.

வடகிழக்கு பருவமழையால், விவசாய நிலங்கள் குளிர்ந்துள்ளன. பாசனக்கிணறுகளின் நீர்மட்டம் உயர்ந்து, விவசாயிகளுக்கு திருப்தியை கொடுத்துள்ளன.நிலத்தடி நீரால் தென்னைகளின் வளர்ச்சியும், காய்ப்பிடிப்பு திறனும் கூடியுள்ளன.ஆனாலும், தக்காளி, மிளகாய், கத்திரி உள்ளிட்ட செடிகள் மழை நீர் தேங்குவதால் அழுகி, இழப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இதைத்தவிர்க்க, பெரும்பாலான விளைநிலங்களில் வடிகால் வசதி ஏற்படுத்தி, பயிர் பாதிப்பு இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படுகிறது. ஆனாலும், சமீப

நாட்களில் பெய்த, ஓயாத மழையால், தக்காளிச்செடிகளில் இருந்த பூக்கள் உதிர்ந்ததோடு, செடிகளுக்கிடையே மழைநீர் தேங்கி செடிகள் கறுத்து, ஏறக்குறைய அழிந்து விட்டன. செடிகளில் காய் பிடிக்கும் தருணத்தில், மழை பெய்ததாலும், ஒரு கூடை தக்காளி, 600 - 850 ரூபாய் வரையில் விற்றதாலும், விவசாயிகள் வேதனைக்கு தள்ளப்பட்டு விட்டனர். முன்னேற்பாடாக, வடிகால் வசதி கொண்ட நிலங்களில், நடவு செய்திருந்த தக்காளிச் செடிகளில் பூ, பிஞ்சுகள் உதிர்ந்த நிலையிலும், செடிகள் மட்டும் உயிரோடு அழுகாமல் இருக்கின்றன. கவலைப்படாத முற்போக்கு விவசாயிகள் பலர், முறையாக செடிகளுக்கு ஊட்டம் மிக்க மருந்துகளை தெளித்து, மீண்டும் துளிர்விட செய்துள்ளனர்.

**'ரூ. 2-5 லட்சம் லாபம் கிடைக்கும்'**

இதுகுறித்து, சிங்கராம்பாளையத்தில் ஆறு ஏக்கர் பரப்பளவில், தக்காளி நடவு செய்துள்ள விவசாயி அப்பு கூறுகையில், "வடிகால் வசதி இருந்ததால் செடிகள் அழுகவில்லை. ஆனாலும், பூ, பிஞ்சுகள் உதிர்ந்து விட்டன. மழைக்கு முன்பே தக்காளி அறுவடை துவங்கி விட்டதால், ஏறக்குறைய பெரும் இழப்பில் இருந்து தப்பி விட்டேன். நல்ல விலை இருந்தபோதே முதலீட்டுடன் லாபமும் கிடைத்து விட்டது. தற்போது இச்செடிகள் மீண்டும் தழைக்கும் வகையில் விலை உயர்ந்த மருந்துகள் தெளிக்கப்பட்டுள்ளது," என்றார். இச்செடிகள் மீண்டும் பூ பூத்து, அறுவடையை கொடுக்கும். வெளி மாவட்டம் மற்றும் மாநிலங்களில் இருந்து தக்காளி வரத்து இல்லாது இருந்தாலோ, குறைவாக வந்தாலோ நல்ல விலை கிடைக்கும், இதேபோல இன்னொரு முறையும் சாகுபடி காணலாம்.ஏக்கருக்கு எல்லா செலவும் போக, 2 - 5 லட்சம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்,' என, தக்காளி சாகுபடியாளர்களுக்கு நம்பிக்கை தெரிவித்தார்.

**மழையால் பயிர்களுக்கு பாதிப்பு: வேதனையில் விவசாயிகள்**

பேரையூர்:பேரையூர் பகுதியில் மழையால் விளைநிலங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் பல்வேறு பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.சில

ஆண்டுகளாக இப்பகுதியில் மழை இல்லாததால் விவசாய பணிகள் நடக்கவில்லை. கடன் பெற்று விவசாயம் செய்தும் தண்ணீர் இன்றி பயிர்கள் பாதிக்கப்பட்டன. இந்நிலையில் இந்தாண்டு சில வாரங்களாக மழை பெய்தது. இதனால் கண்மாய்கள், குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. கண்மாய்களுக்கு வரத்துக்கால்வாய்கள் சரியின்றி மழைநீர் திசைமாறி வயல்களுக்குள் புகுந்தது. 5,000 ஏக்கரில் வெள்ளநீர் புகுந்ததால் பாசிப்பயறு, உளுந்து, பருத்தி, சோளம், நெல், மக்காச்சோளம், மிளகாய், குதிரைவாலி, மல்லி போன்ற பயிர்கள் நீரில் மூழ்கி சேதமாயின. இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர்.

**மழை பெய்தும் விவசாயிகளுக்கு பயனில்லை:ஈரமான பயிர்களால் விலை இல்லை**



டி.கல்லுப்பட்டி;டி.கல்லுப்பட்டி, பேரையூர், வில்லூார் உள்ளிட்ட பகுதிகளில் அதிக மழை பொழிவால் கண்மாய்கள் நிறைந்தாலும், பயிர்கள் நனைந்து காணப்படுவதால் போதிய விலையின்றி விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர். இப்பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் சோளம், கம்பு, நெல், வாழை பயிரிடப்பட்டுள்ளன. தீபாவளி முதல் பெய்த தொடர் மழையால் மாவட்டத்திலேயே பேரையூர், வில்லூார் பகுதியில் தான் அதிக மழைப் பொழிவு இருந்தது. இதனால், பெரும்பாலான கண்மாய்கள் நிரம்பின. வில்லூாரில்

நான்கு ஆண்டுகளுக்கு பின் பெரிய கண்மாய் நிரம்பியது. இது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

நூற்றுக்கணக்கான ஏக்கரில் சோளம் மற்றும் கம்பு பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது. வில்லூர் உட்பட பல பகுதிகளில் சோளம் அறுவடையை விவசாயிகள் துவக்கி விட்டனர். ஆனால், செவட்டை மற்றும் வெள்ளை நோய்த் தாக்குதல் மற்றும் ஈரப்பதம் காரணமாக விவசாயிகள் எதிர்பார்த்த அளவிற்கு சோளம் விலை போகவில்லை. இது விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.வில்லூர் விவசாயி பிச்சை கூறியதாவது: கடந்த ஆண்டில் போதிய மழை இல்லை என்றாலும், சோளம் குவிண்டால் ரூ.2500க்கு விற்பனை செய்தோம். ஆனால் தற்போது மழையால் ஏற்பட்ட ஈரப்பதம் காரணமாக குவிண்டால் ரூ.1300 ஆக குறைந்து விட்டது. சோளம் பயிரிட ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் ஆகிறது. அறுவடைக்கு கூலியாக ஒருவருக்கு ரூ.400 சம்பளம் கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் குவிண்டால் ரூ.2200 என விலை இருந்தால் தான் நஷ்டமில்லாமல் தப்பிக்க முடியும். இதே நிலைமை தான் கம்புக்கும். மழை பெய்தும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி இல்லை, என்றார்.

**பலவகை மரக்கன்றுகள் விற்பனை**



நாமக்கல்: தேனி மாவட்டம், பெரியக்குளத்தில் இருந்து, கொய்யா, மாதுளை, நெல்லி, சப்போட்டா, மா போன்ற பலவகை மரக்கன்றுகள் மோகனூர் அடுத்த வளையப்பட்டியில், சரக்கு ஆட்டோவில் வந்து விற்பனை செய்து வருகின்றனர். மா வகையில், மல்கோவா, பங்கனபள்ளி, செந்தூரம், வாழப்பாடி, கிரேப், அல்போன்சா போன்ற ரகங்களை மக்கள் அதிக அளவில் வாங்கிச் செல்கின்றனர். அவற்றின் விலை, 120 முதல், 180 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரி சங்கர பாண்டியன் கூறியதாவது: மழைக்காலம் துவங்கி உள்ளதால், பழவகை மரக்கன்றுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றை பொதுமக்கள், விவசாயிகள் என பலரும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். நல்ல தரமான மண்ணில் இந்த வகை ரகங்கள் நன்கு வளர்ந்து, பலன் கொடுக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**வெங்காயத்தில் அழுகல் நோய்: விவசாயிகள் கடும் பாதிப்பு**

மல்லசமுத்திரம்: ஒரு மாதத்துக்கு மேல் பெய்த கனமழையால், அறுவடை நேரத்தில் வெங்காயத்தில் அழுகல் நோய் தாக்கி பெரும் இழப்பை ஏற்படுத்தி உள்ளது. திருச்செங்கோடு அடுத்த மல்லசமுத்திரம் யூனியனுக்கு உட்பட்ட மொஞ்சனூர், கல்லுபாளையம், வையப்பமலை, செக்காரப்பட்டி, ஆத்துமேடு, அக்கரைப்பட்டி, கருங்கல்பட்டி, பருத்திப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில், சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, சின்ன வெங்காயம் சீசன் என்பதால், சுற்று வட்டாரத்தில், 1,000க்கும் அதிகமான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. 100 நாள் பயிரான சின்ன வெங்காயம், ஆவணி கடைசி வாரத்தில் சாகுபடி செய்து, கார்த்திகை முதல் தேதியில் அறுவடை செய்யப்படுகிறது. தேவைக்கு ஏற்ப அதன் விலை அதிகரிக்கும், குறையும். தற்போது, கார்த்திகை துவங்கி உள்ள நிலையில், வெங்காயம் அறுவடையும் துவங்கி இருக்க வேண்டும். ஆனால், கடந்த, ஒரு மாதமாக கனமழை பெய்ததால், வயல்களில் தண்ணீர் தேங்கியது. அதனால், வேர் அழுகல் நோய் தாக்கி, உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வேறுவழியின்றி அவற்றை பிடுங்கி, விற்பனைக்கு கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், சின்ன

வெங்காயம் விலை குறைந்துள்ளது. மேலும், அழுகிய நிலையில் காணப்படுவதாலும், சொத்தையாக இருப்பதாலும், சின்ன வெங்காயம் விற்பனை மந்தமாகி உள்ளது. இது விவசாயிகளையும், வியாபாரிகளையும் கவலை அடையச் செய்துள்ளது. இது குறித்து சேலத்தை சேர்ந்த வியாபாரி சுந்தரம் கூறுகையில், "தொடர் மழையால், வெங்காயம் அழுகி பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. பாதிப்பு அடைந்த வெங்காயம் அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டுவரப்படுகிறது. அவற்றை ஒரு கிலோ, 25 ரூபாய்க்கு விற்பனை செய்கிறோம். அதனால், நஷ்டம் ஏற்பட்டுள்ளது," என்றார்.

**கள ஆய்வு பணியில் ஈடுபடுபவர்களுக்கு தாமதமின்றி நிதி வழங்க கோரிக்கை**

சேலம்: 'சேலம் மாவட்டத்தில், வாக்காளர் பட்டியல் வெளியிட, கள ஆய்வு பணியில் ஈடுபடுபவர்களுக்கு, தாமதமின்றி நிதி வழங்க வேண்டும்' என, கோரிக்கை எழுந்துள்ளது. லோக்சபா, சட்டசபை, உள்ளாட்சி தேர்தல் வாக்காளர் பட்டியல்களை வெளியிடுவதற்கான பணியில், அரசு ஊழியர்கள் ஈடுபடுவர். வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்குவது முதல் தேர்தல் முடியும் வரை அனைத்து பணிகளையும் மேற்கொள்வர். இதற்கு, தேர்தல் ஆணையத்தின் மூலம் தனியாக, 4,000 ரூபாய் வழங்கப்படும். கடந்த லோக்சபா தேர்தலில் பணியாற்றியவர்களுக்கு, இரண்டு மாதத்துக்கு முன்பு தான், 20 லட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டது. நீண்ட இழுபறிக்கு பிறகு இந்த தொகை வழங்கியதால், தேர்தல் பணியில் ஈடுபட்டவர்கள் அதிருப்தி அடைந்தனர். ஜன., மாதம் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது. அதற்காக, வீடு, வீடாக வாக்காளர் குறித்த கள ஆய்வு பணி மேற்கொள்ளப்படுகிறது. ஓட்டுச்சாவடி நிலைய அலுவலர்களாக பில் கலெக்டர்கள், ஆசிரியர்கள், மாநகராட்சியில் பணியாற்றும் சமுதாய அமைப்பாளர்கள், என வடக்கு தொகுதியில், 286 பேர், மேற்கு தொகுதியில், 288 பேர், தெற்கு தொகுதியில், 291 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஒரு மாதமாக பணியாற்றி வருகின்றனர். தேர்தல் பிரிவு அதிகாரிகளுக்கு காலதாமதமின்றி நிதியை வழங்க வேண்டும், என கோரிக்கை எழுந்துள்ளது. ஓட்டுச்சாவடி நிலைய அலுவலர்

ஒருவர் கூறுகையில்," ஏற்கனவே உள்ள பணிச்சுமையில், வாக்காளர் பட்டியல் வெளியிடுவதற்காக, வீடு, வீடாக சென்று ஆய்வு செய்து வருகிறோம். கடந்த லோக்சபா தேர்தலின் போது பணியாற்றியதற்கு, பல மாதம் தாமதமாக கழித்து நிதி வழங்கப்பட்டது. சொந்த செலவில், சாப்பாடு, போக்குவரத்து உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்தோம். இந்த பணியிலாவது தாமதமின்றி வழங்க வேண்டும்," என்றார்.

**விவசாயிகள் உற்பத்தி நிறுவன துவக்க விழா**

வாழப்பாடி: வாழப்பாடி அடுத்த, புத்திரகவுண்டன் பாளையத்தில் நடந்த, வசிஷ்டா விவசாயிகள் உற்பத்தி நிறுவன துவக்க விழாவில், 200 கூட்டு குழுக்களுக்கு, நபார்டு மற்றும் பல்லவன் கிராம வங்கி வாயிலாக, இரண்டு கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. வாழப்பாடி அடுத்த, புத்திரகவுண்டன் பாளையத்தில், வசிஷ்டா விவசாயிகள் உற்பத்தி நிறுவன துவக்க விழா மற்றும், 200 கூட்டு பொறுப்புக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் விழா நடந்தது. நபார்டு வங்கி நிர்வாக துணை இயக்குனர் அமலோற் பவநாதன் தலைமை வகித்தார். நபார்டு வங்கியுடன் இணைந்து, பல்லவன் கிராம வங்கி வாயிலாக, 200 கூட்டு குழுக்களுக்கு, இரண்டு கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டது. நபார்டு வங்கி தமிழ்நாடு பிராந்திய முதன்மை பொது மேலாளர் ராவ், வசிஷ்டா விவசாயிகள் உற்பத்தி நிறுவன இயக்குநர் அபிநவம் ஜெயராமன், பல்லவன் கிராம வங்கி வட்டார மேலாளர் கருணாகரன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விவசாயத்துக்கு வட்டியில்லா கடன்: பாரதிய கிசான் சங்கம் வலியுறுத்தல்**

ஈரோடு: 'விவசாயத்துக்கு வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்' என, பாரதிய கிசான் சங்க தேசிய அமைப்பு செயலாளர் தினேஷ் குல்கர்னி தெரிவித்தார்.

ஈரோட்டில் நடந்து வரும் இச்சங்க மாநாட்டில் பங்கேற்க வந்த தினேஷ் குல்கர்னி, தேசிய செயற்குழு உறுப்பினர் பெருமாள் கூறியதாவது: சென்னையில் நடந்த வெள்ள பாதிப்பு, மனித தவறால் நிகழ்ந்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு, மாநில அரசு அதிக நிவாரண உதவிகளை வழங்க வேண்டும். வேளாண் விளை பொருளுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும். இதற்காக மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி, விரைவில் போராட்டம் நடத்த உள்ளோம். வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை பாதிப்புக்களின்போது, மொத்த இழப்பாக பார்க்காமல், ஒவ்வொரு தனி நபருக்கான இழப்புக்கு ஏற்ப, பயிர் காப்பீட்டு தொகை வழங்க வேண்டும். விவசாயத்துக்கு வட்டியில்லா கடன் வழங்க வேண்டும். தமிழகத்தில், 39ஆயிரம் ஏரிகள், குளங்கள் இருந்துள்ளன. இவற்றை முறையாக பராமரித்து, தூர்வாரி, நீரை தேக்கினால், மாநில அளவில், 400 டி.எம்.சி., நீரை சேமிக்கலாம். இதை நிறைவேற்ற மாநில அரசு முயல வேண்டும். இவ்வாறு கூறினர்.

**உளுந்து பயிர்கள் செழிப்பு: மகிழ்ச்சியில் விவசாயிகள்**

ரிஷிவந்தியம்: ரிஷிவந்தியம் பகுதியில் மானவரி நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள உளுந்து பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ரிஷிவந்தியம் மற்றும் அதன் சுற்று வட்டார கிராம பகுதியில் உள்ள விவசாயிகள் பலர் உளுந்து பயிர் சாகுபடியில் ஈடுபட்டிருந்தனர். 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் உளுந்து பயிருக்கு அதிகளவு தண்ணீர் தேவையில்லை. கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த வடகிழக்கு பருவமழையால் பல இடங்களில் பயிர்கள் சேதமடைந்து காணப்படும் நிலையில், பாலப்பட்டு, ராயபுரம், பள்ளிப்பட்டு, சித்தால் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உளுந்து பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன. பயிர் செழிப்பாக வளர்ந்துள்ளதாலும், மார்கெட் கமிட்டியில் கூடுதல் இலாபம் கிடைப்பதாலும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

கரூர்: கரூர் மாவட்டம் முழுவதும், கடந்த நவம்பர், 10ம் தேதி முதல் தொடர்ந்தும் அவ்வப்போதும் மழை பெய்து கொண்டே இருந்தது. இதனால்,

மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, ராகி, முருங்கை போன்ற பயிர்கள் நன்கு செழித்து காணப்படுகின்றன. குச்சிக்கிழங்கு, கோரைப்பயிர்கள் சேதமடையவில்லை. பூக்கள் பயிரிட்ட விவசாயிகள் மட்டும் சற்று சிரமப்பட்டனர். பூக்களின் மொட்டுக்கள் உதிர்ந்தும், விளைச்சல் குறைந்துள்ளது. அதேபோல், முருங்கை சாகுபடியில், செடி முருங்கை, கொடி முருங்கை நன்றாக வளர்ந்துள்ளது. மொத்தத்தில், மாவட்டம் முழுவதும், மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளது. கடந்த இரண்டு நாட்களாக அதிக மழையில்லை என்றாலும், நேற்றுமுன்தினம் மாலை, 4 மணி முதல் நேற்று காலை, 8 மணி வரை, 1.4 மி.மீட்டர் மழை அரவக்குறிச்சியில் மட்டும் பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முளைப்பு திறனில் விதையின் தரத்தை அறியலாம்

ஊட்டி: 'விதையின் தரம், அதன் முளைப்புத் திறனை பொறுத்தே அமையும்' என, தெரிவிக்கப்பட்டது. ஊட்டி விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் லாவண்யாஜெயசுதா அறிக்கை; மாவட்ட விவசாயிகள், தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து, அதன் தரத்திற்கேற்ப விதைத்தால் நல்ல விளைச்சல் பெற முடியும். ஊட்டி ரோஜா பூங்கா அருகேயுள்ள தோட்டக்கலை இணை இயக்குனர் அலுவலக வளாகத்தில் செயல்படும் விதைப் பரிசோதனை நிலையத்தில், கேரட், பீட்ரூட், பீன்ஸ், காலி பிளவர், முட்டை கோஸ், முள்ளங்கி, டர்னிப், கோதுமை, பாலக்கீரை விதைகளின் முளைப்புத் திறன் பரிசோதனை செய்யப்படுகிறது. விதைப் பரிசோதனை நிலையத்தில், விதை ஆய்வாளர் மூலம் விற்பனை நிலையங்களில் இருந்து எடுக்கப்படும் மாதிரிகள், விதை விற்பனையாளர் மற்றும் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் விதைகள் என, இரு வகைகளில் விதைப் பரிசோதனை செய்யப்படுகிறது; கட்டணமாக, 30 ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

* இதில், 60 சதவீத முளைப்புத்திறன் கொண்ட கேரட் மற்றும் பீட்ரூட் விதைகள் தரமானவை; அதற்கான பரிசோதனை முடிவுகள், 7 -- 14 நாட்களுக்குள் அளிக்கப்படும். பீன்ஸ் மற்றும் பட்டாணி விதைகளின் முளைப்புத் திறன், 75

சதவீதம் இருக்க வேண்டும்; அதற்கான பரிசோதனை முடிவுகள், 5--9 நாட்களுக்குள்ளும் வழங்கப்படும். * நூல்கோல், முள்ளங்கி, முட்டை கோஸ் விதைகளின் முளைப்புத் திறன், 70 சதவீதமாக, காளிப்பிளவர் விதையின் முளைப்புத் திறன், 65 சதவீதமாக இருக்க வேண்டும்; பரிசோதனை முடிவுகள், 4-10 நாட்களுக்குள் அறிவிக்கப்படும். எனவே, விவசாயிகள் விதைகளின் தரம் அறிந்து பயிரிட்டு, அதிக மகசூல் பெற வேண்டும்.இவ்வாறு, லாவண்யாஜெயசுதா கூறினார்.

**காய்கறி பணியில் விவசாயிகள் ஆர்வம்**

மஞ்சூர்: மழை ஓய்ந்து வெயில் தென்பட்டதால், பொதுமக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பினர். மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில், வட கிழக்கு பருவமழை தொடர்ந்ததால், தேயிலை தோட்டம், மலை காய்கறி தோட்டங்களுக்கு செல்லும் விவசாயிகள், வெளியிடங்களுக்கு வேலைக்கு செல்பவர்கள் மற்றும் பள்ளி, கல்லுாரிக்கு செல்லும் மாணவ, மாணவிகள் குளிரால் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்று மழையின் தாக்கம் ஓய்ந்ததை அடுத்து வெயில் தென்பட்டது. தேயிலை, மலை காய்கறி தோட்டங்களுக்கு செல்லும் விவசாயிகள் பணிக்கு ஆர்வத்துடன் சென்றனர்.

**நெற்பயிரை தாக்கும் பூச்சியைஅழிக்க விவசாயிகளுக்கு பயிற்சி**

பழநி:பழநி வேளாண் அட்மா திட்ட விவசாயிகளுக்கு நெற்பயிர்களில் தாக்கும் பூச்சிகளை அழிக்கும் வழிமுறைகள் குறித்து பயிற்சிஅளிக்கப்பட்டது. பழநி அருகே ஆயக்குடியில் நடந்த பயிற்சி முகாமிற்கு மாவட்ட வேளாண் துணை இயக்குனர் தங்கச்சாமி தலைமை வகித்தார். உதவி இயக்குனர் சுருளியப்பன் முன்னிலை வகித்தார். நெற்பயிர்களில் காணப்படும் பூச்சிகளை இயற்கை முறையில் அதாவது விளக்குப்பொறியின் மூலம் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். மஞ்சள் ஓட்டுப்பொறி மூலம் அஸ்வினி போன்ற சாறு உறிஞ்சும் பூச்சிகளை அழிக்கலாம். இம்முறைகளை ஒவ்வொரு விவசாயிகளும் கற்றுகொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு

பூச்சிகளின் எண்ணிக்கையை கண்டறியும் செயலாக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை அட்மா தொழில்நுட்ப மேலாளர் கோசல்நாத், உதவி மேலாளர்கள் மணிகண்டராஜா, ஜெகநாதன் செய்தனர்.

## தென்னை மகசூல் அதிகரிக்க "சணப்பு' பயிரிடும் விவசாயிகள்

செந்துறை:செந்துறை மற்றும் நத்தம் பகுதி விவசாயிகள் தென்னை மகசூலை அதிகரிக்க "சணப்பு' பயிரை பசுந்தாள் உரமாக பயிரிடுகின்றனர். பொதுவாக விவசாயிகள் நெல் சாகுபடி நிலங்களில் தக்கைப் பூண்டு, கொழிஞ்சி போன்றவற்றை விதைத்து குறிப்பிட்ட வளர்ச்சி அடைந்தவுடன் உழுது, மக்கச்செய்து உரமாக்குவர். இவை தவிர இப்பகுதி விவசாயிகள் சணப்பு பயிரை பசுந்தாள் உரமாக அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதன் மூலம் பயிர்களுக்கு கால்சியம் மற்றும் தழைச்சத்தை கொடுப்பதோடு அதன் வேர் முடிச்சுகளில் உள்ள பாக்டீரியாக்கள் நைட்ரஜனை உள்செலுத்துகின்றன.

தென்னைக்கும் பயன்பாடு: வயல்களுக்கு மட்டுமின்றி தற்போது தென்னைந்தோப்புகளில் இதை பயிர் செய்து உரமாக்குகின்றனர். ஏக்கருக்கு குறைந்த பட்சம் 4 கிலோ முதல் அடர்த்தி தேவைப்படும் அளவிற்கு கூடுதலாக விதைக்கலாம். விதைத்ததில் இருந்து 50 முதல் 60 நாட்களில் வளர்ந்து பூக்கும் பருவத்தில், ஈரப்பதத்துடன் "ரொட்டேட்டர்' மூலம் உழுது மக்கச் செய்தால் <உரமாகிவிடும். இதனால் மண்வளம் கூடுவதோடு, தென்னையின் காய்ப்புத்திறன் அதிகரிக்கிறது. இதே போல் தென்னைகளுக்கு இடையில் தட்டைப்பயிர் சாகுபடி செய்து, அறுவடை முடிந்த பிறகு அதன் கொடியை பசுந்தாள் உரமாக்கலாம்.

## நிரம்பி வழியும் குளங்களால் விவசாயிகள் மகிழ்ச்சி :உழுதல், நடவுப்பணிகளில் தீவிரம்

பழநி:தொடர்மழைகாரணமாக பழநிபகுதியிலுள்ள குளங்கள், கண்மாய்கள் நிரம்புள்ளதால் விவசாயிகள் சாகுபடிகளை துவக்கியுள்ளனர். மேற்குத்தொடர்ச்சி கொடைக்கானல்மலை, பழநி மலைப் பகுதியில் தொடர்ந்து

மழை பெய்துவருகிறது. இதனால் வரதமாநதி அணை, பாலாறு-பொருந்தலாறு அணை, குதிரையாறு ஆகிய மூன்று அணைகளும் நிரம்பி வழிகிறது.

புளிமரத்துசெட் பழநி நகராட்சி கோடைகால நீர்த்தேக்கமும் நிரம்பியுள்ளது. இதனால் பழநியிலுள்ள குளங்கள், கண்மாய்கள் 56ம் நிரம்பி வாய்க்கால், ஓடைகளில் தண்ணீர் வெளியேறுகிறது. இவ்வாண்டு நெல், மக்காசோளம், கரும்பு, காய்கறிகள் சாகுபடி கடந்த ஆண்டுகளை விட மும்மடங்கு உயர்ந்துள்ளது. நீர்நிலைகள் நிரம்பி உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நகர, கிராமப்புறங்களின் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்துள்ளது. வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" கடந்த ஆண்டுகளில் மழைபெய்தாலும் எல்லா குளங்கள், கண்மாய்கள் நிரம்ப மிகவும் காலதாமதமாகின. இதனால் விவசாயிகள் வருத்தமடைந்தனர். இந்தாண்டு தொடர் மழைகாரணமாக பழநி பகுதியிலுள்ள குளங்கள், கண்மாய்கள் அனைத்தும் நிரம்பி மறுகால் செல்கிறது. இதனால் உழவு மற்றும் நடவு உட்பட பல விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. வேளாண்துறை சார் சிறப்புமுகாம் நடத்திவருகிறோம்,"என்றார்.

**கூட்டுறவு சங்க பயிர்க்கடன் வழங்க புதிய விவசாயிகளுக்கு முக்கியத்துவம்**

தேனி:கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பயிர்க்கடனில் 30 சதவீதம், புதிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் ஆண்டு தோறும் பல கோடி ரூபாய் விவசாய பயிர்க்கடனாக வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் பயிர்க்கடன் வழங்கும் இலக்கு அதிகரித்தாலும், பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கை உயரவில்லை.தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கி பலமுறை சலுகைகளை அனுபவித்த விவசாயிகளே மீண்டும், மீண்டும் கடன் பெருகின்றனர். புதிய மற்றும் ஏழை விவசாயிகள் கடன் பெற முடியவில்லை.எனவே, புதிய மற்றும் ஏழை விவசாயிகளுக்கும் உதவும் வகையில் அரசு கூட்டுறவு கடன் கொள்கையில் மாற்றம் கொண்டு வந்துள்ளது.இதன்படி ஒவ்வொரு ஆண்டும் தொடக்க விவசாயிகள் கூட்டுறவு

சங்கங்கள் மூலம் வழங்கப்படும் பயிர்க்கடனில் 30 சதவீதம் புதிய விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என அறிவுறுத்தி உள்ளது.இதைதொடர்ந்து ஒவ்வொரு கூட்டுறவு சங்கமும் தங்கள் பகுதியில் உள்ள புதிய விவசாயிகளை உறுப்பினர்களாக சேர்த்து, அவர்களுக்கு பயிர்க்கடன் வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. ஏற்கனவே கடன் பெறாத விவசாயிகளுக்கு உடனடி கடன் அனுமதியும் வழங்கப்பட்டு வருகிறது.

### ஏலச்செடியில் அழுகல் நோய்:கட்டுப்படுத்த ஆலோசனை

கம்பம்;கேரளாவில் உள்ள ஏலத்தோட்டங்களில் "அழுகல்' நோய் தாக்கியுள்ளதால் விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர். கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் பரப்பில் ஏலக்காய் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது பெய்து வரும் மழையால் ஏலச்செடிகளில் அழுகல் நோய் தாக்கியுள்ளது. வேர் அழுகல், தட்டை அழுகல், இலைக்கருகல் நோய் அதிகமாக காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர்.அழுகல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஏலக்காய் சாகுபடி தொழில்நுட்ப ஆலோசகர் வி.எம்.அன்பழகன் கூறியதாவது: மண்ணில் வசிக்கும் பித்தியம் மற்றும் பைட்டோப்தோரா பூஞ்சானத்திற்கு எதிராக வேலை செய்யும் மருந்துகளை பயன்படுத்தினால் அழுகல் நோயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம். பாலிகியூர் 100 மிலி, டாஸ்பா 50 மிலி, கார்பரியோ டாப் 150 கிராம், அவ்தார் 200 கிராம், ஸ்பிரிண்ட் 150 கிராம் இதில் ஏதேனும் ஒரு மருந்தினை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளில் படும்படி தெளிக்க வேண் டும். அல்லது ஒரு செடிக்கு 5 முதல் 6 லிட்டர் மருந்து கலந்த தண்ணீரை வேர்ப்பகுதியில் ஊற்றியும் கட்டுப்படுத்தலாம் இவ்வாறு கூறியுள்ளார்.

### சர்க்கரை நோய்க்கு சிறப்பு பெட்டகம்:சித்த மருத்துவ பிரிவுகளில் விநியோகம்

கம்பம்:சர்க்கரை நோய்க்கு சிறப்பு மருந்துகள் அடங்கிய பெட்டகம் சித்த மருத்துவ பிரிவுகளில் நாளை (15.12.15) முதல் விநியோகம் செய்யப்படுகிறது என்று அரசு சித்த மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சர்க்கரை நோய், ரத்தக் கொதிப்பு, பெண்களுக்கு எலும்பு மெலிவு நோய், சினைப்பை நீர்க்கட்டிகள் மற்றும் வெள்ளைபடுதல் போன்ற நோய்களுக்கு தேவையான மருந்துகள் அடங்கிய சித்த மருத்துவ சிறப்பு பெட்டகங்கள் தேனி மாவட்டத்திற்கு வந்துள்ளன. மாவட்டத்தில் உள்ள 22 சித்தா மருத்துவமனைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காமயகவுண்டன்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய சித்தா டாக்டர் சிராசுதீன் கூறியதாவது: சர்க்கரை நோய் உள்ளிட்ட 5 வகையான நோய்களுக்குரிய சிறப்பு பெட்டகம் நாளை முதல் விநியோகிக்கப்படுகிறது. சர்க்கரை நோய் பெட்டகத்தில் மதுமேக சூரணம், ஆவாரை குடிநீர், கற்பூராதி தைலம், நிலவேம்பு கசாயம் மருந்துகள் உள்ளன. ரத்தகொதிப்பு நோய் பெட்டகத்தில் சர்ப்பகந்தா மாத்திரை, மருதம்பட்டை கேப்சுல், வெண்தாமரை சூரணம் <<உள்ளன. பெண்களுக்கு ஏற்படும் எலும்புமெலிவு நோய் பெட்டகத்தில் அமுக்கரா சூரணம், போரோசிஸ் மருந்துகள், பவளப்பற்பம், பிண்ட தைலம், சினைப்பை நீர்க்கட்டி பெட்டகத்தில் அசோகபட்டை சூரணம், வெண்பூசணி லேகியம், சிலாசத்து பற்பம், அமுக்கரா சூரணம், வெள்ளைபடுதல் நோய் பெட்டகத்தில் புஷ்யானுக சூரணம்,திரிபலா சூரணம், சதாவரி லேகியம், தாமதூத ரசம் மாத்திரை போன்றவைகள் இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் ஒரு பெட்டகம் மட்டுமே வழங்கப்படும். இரண்டு மாதங்களுக்குரிய மருந்துகள் பெட்டகங்களில் இருக்கும். எனவே தொடர் சிகிச்சையே இதன் நோக்கமாகும். வேண்டிய மருந்து பெட்டகங்களை சம்பந்தப்பட்ட நோயாளிகளை பரிசோதித்து வழங்கப்படும். இதற்கான நிகழ்ச்சி நாளை காலை காமயகவுண்டன்பட்டியில் நடைபெறுகிறது. இவ்வாறு கூறியுள்ளார்.

**தேனியில் தேங்காய் விலை சரிவை தடுக்க கொப்பரை தொழிற்சாலை**

தேனி:தேனி மாவட்டத்தில் 18 ஆயிரத்து 173 ஹெக்டேரில் தென்னை மரங்கள் உள்ளன. தென்னையை தாக்கும் காண்டாமிருக வண்டு, கருந்தலைப்புழு, மாவுப்பூச்சி, மலையடிவாரத்தில் குரங்குகளால் ஏற்படும் இழப்பு என பாதிப்புகள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பறிக்கப்பட்ட தேங்காயின்

விலையும் சரிந்து விட்டது. இதுகுறித்து மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன், அரசுக்கு அனுப்பி உள்ள மனுவில்,"தேங்காய் ஒன்றுக்கு 15 ரூபாய் என அரசே விலை நிர்ணயம் செய்து, கொள்முதல் செய்ய வேண்டும். மத்திய, மாநில அரசுகள், தேங்காய் மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நல வாரியம் இணைந்து, தேனியில் தேங்காயில் இருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை, உணவுப்பொருட்களை தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்க வேண்டும். தேங்காய் மட்டை, நார் இவற்றில் இருந்து கைவினை பொருட்களை உற்பத்திவேண்டும். தென்னை நடவு மானியம், நோய் தாக்கிய பகுதி மானியம் வழங்க வேண்டும்,என கூறியுள்ளார்.

**நீடிக்கும் மேலடுக்குச் சுழற்சி: மழைக்கு வாய்ப்பு**

மாலத்தீவு, அதை ஒட்டிய பகுதியில் நீடிக்கும் மேலடுக்குச் சுழற்சியால், தமிழகம், புதுச்சேரியில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: மாலத்தீவு, லட்சத்தீவு கடல் பகுதியில் நிலவிய மேலடுக்குச் சுழற்சியானது, ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மாலத்தீவு, அதை ஒட்டிய பகுதியில் தொடர்ந்து நீடிக்கிறது. இதனால், தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் மழை பெய்யும். அடுத்து வரும் 3 நாள்களுக்கு மிதமான மழை பெய்யும். பலத்த மழை எச்சரிக்கை எதுவும் இல்லை. சென்னை மாநகரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் என்றனர். மழை அளவு விவரம்: ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம் (

மி.மீட்டரில்):

திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம், சிவகிரி-40, சங்கரன்கோவில்-30, கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை, சிவகங்கை, விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம், திருநெல்வேலி மாவட்டம் தென்காசி ஆகிய இடங்கள்-20. நீலகிரி மாவட்டம் நடுவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு, விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர், கோவை மாவட்டம் வால்பாறை, சின்னகல்லார், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி, கன்னியாகுமரி, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல், தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட பகுதிகள்-10.

**சிவகங்கை மாவட்டகால்வாய்களுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறப்பு**

சிவகங்கை மாவட்டப் பாசனத்துக்கு, ஞாயிற்றுக்கிழமை வைகை அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் கால்வாய்களுக்கு திருப்பி விடப்பட்டது. பூர்வீக வைகை பாசனப் பகுதிகளான சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு வைகையாற்றில் தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி, முதல்கட்டமாக வைகை அணையிலிருந்து ராமநாதபுரம் மாவட்டத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக, 5 நாள்களுக்கு சிவகங்கை மாவட்டத்துக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதையடுத்து, மதுரை மாவட்டம் விரகனூர் மதகு அணையிலிருந்து ராமநாதபுரம் மாவட்டம் பார்த்திபனூர் மதகு அணை வரை உள்ள வைகையாற்று கால்வாய்களில் ஷட்டர்கள் திறக்கப்பட்டு, கண்மாய்களுக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. மானாமதுரை, திருப்புவனம் வட்டங்களிலுள்ள பழையனூர், மாரநாடு, கட்டிக்குளம், கீழப்பசலை உள்ளிட்ட பல்வேறு கால்வாய்களில் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. கால்வாய்களில் தடையின்றி தண்ணீரைக் கொண்டு சென்று கண்மாய்களில் சேர்க்க அந்தந்தப் பகுதி விவசாயிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

**ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் இழப்பீடு வழங்க வலியுறுத்தல்**

கன மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு பாரதிய கிஷான் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இச்சங்கத்தின் மாநில மாநாடு ஈரோடு ஏஈடி பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் பி.காசியண்ண கவுண்டர் கொடியேற்றினார். பாரதிய கிஷான் சங்கத் தலைவர் ஆனந்தன் வரவேற்றார். கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீனம் ராஜசரவண மாணிக்க வாசக சுவாமி, கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கப்பட்டினம் காவேரி தூய்மை இயக்கம் சார்பில் கணேசஸ்வ ரூபானந்த சுவாமிகள் ஆகியோர் அருளாசி வழங்கிப் பேசினர். மாநிலத் தலைவர் கே.ஆர்.சுந்தர்ராஜன் தலைமை வகித்தார்.

இம்மாநாட்டில், விவசாய விளைபொருள்களுக்கு எம்.எஸ்.சுவாமிநாதன் குழு அறிக்கையின் அடிப்படையில் உற்பத்தி செலவுடன் 50 சதவீதம் லாபத்தை சேர்த்து விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற அறிவிப்பை நடைமுறைப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயத்திற்கென மத்திய, மாநில அரசுகள் தனி பட்ஜெட் அறிவிக்க வேண்டும்.

தேசிய நதிநீர் இணைப்பு மற்றும் தேசிய நீர்வழிச்சாலைத் திட்டத்தை நிறைவேற்ற தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்திய அளவில் பயிர்காப்பீட்டு திட்டங்கள் பெயரளவிலேயே உள்ளன. இயற்கை சீரழிவுகளாலும், வனவிலங்குகளாலும் ஏற்படும் பயிர் இழப்புகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலம் தீர்வு காண முடியாமல் விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. எனவே, பயிர்காப்பீட்டு நடைமுறைகளை எளிமைப்படுத்தி புதிய காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்த மத்திய, மாநில அரசுகள் முன்வர வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிஷான் மண்டி (விவசாய விளைபொருள் விற்பனை மையம்) அமைக்க வேண்டும். இதன் மூலம் கிசான் மண்டியில் விளைபொருள்களை காய வைத்து, தரம் பிரிக்க தகுந்த இடவசதி ஏற்படுத்தி தரவேண்டும். கரும்பு ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை அரசுத்தரப்பில்

தலையிட்டு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். கனமழையால் பாதிப்படைந்த பயிர்சேதங்களுக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் வீதம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சோலையாறு அணை நீர்மட்டம் உயர்வு**

வால்பாறை பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால் சோலையாறு அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்துள்ளது. வால்பாறை வட்டாரத்தில் மழைப் பொழிவு குறைவு காரணமாக 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. கடந்த வருடம் நான்கு முறை நிரம்பிய அணை, இந்த வருடம் ஒரு முறை கூட நிரம்பவில்லை. இந்நிலையில், கடந்த இரண்டு தினங்களாக சாரல் மழை பெய்து வருவதால், 79 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து தற்போது 82.29 அடியாக உள்ளது.

**பாப்பிரெட்டிப்பட்டியில் கறவை மாடுகள் வளர்ப்பு பயிற்சி**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் அண்மையில் விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

வேளாண் துறை சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர்(பொ) ரா.அருணா குமார் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவி முன்னிலை வகித்தார். பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய கால்நடை உதவிப் பேராசிரியர் தங்கதுரை, கறவை மாடு வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் கன்று பராமரிப்பு, பாலின் தரம், கறவை மாடுகளை தாக்கும் நோய்களான கோமாரி, மடிவீக்கம், கருச்சிதைவு, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களைத தடுக்கும் வழிமுறைகளை பற்றி விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வட்டார தொழில்நுட்ப மேலாளர் வசந்தி, உதவி வேளாண்மை அலுவலர் முனியப்பன் மற்றும் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வத்தல்மலையில் நவீன சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி**

தருமபுரி அருகே வத்தல்மலையில் விவசாயிகளுக்கு நவீன சாகுபடி தொழில்நுட்பம் குறித்து சனிக்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் சார்பில், தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்யும் 50 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி முகாமிற்கு தோட்டக்கலைத் துணை இயக்குநர் அண்ணாமலை தலைமை வகித்தார்.

மலைப் பிரதேசமான இந்தக் கிராமத்தில் சீதோஷ்ண நிலையில் மலைப் பயிர்களான காபி, மிளகு மற்றும் சில்வர் ஓக் மரங்கள் வளர ஏதுவாக உள்ளது. இதனால், இந்தப் பயிர்களை பயிரிட்டு பயனடையுமாறு அவர் கேட்டுக் கொண்டார். தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜன், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் அதிக மகசூல் பெறுவதற்கான ஆலோசனைகள் எடுத்துரைத்தார்.

உதவி இயக்குநர் (பொ) சக்திவேல், விவசாயிகள் கொய்மலர்கள் மற்றும் ஏற்றுமதிக்கான மலர்கள் சாகுபடி செய்வதின் அவசியம் குறித்து விளக்கம் அளித்துப் பேசினார். பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசியர் இந்துமதி, காபி சாகுபடியில் அதிக மகசூல் பெற காபி செடிகளை கவாத்து செய்யும் முறைகள், உர மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். தோட்டக்கலை அலுவலர் விஜயலட்சுமி நன்றி கூறினார். முகாமில், உதவி வேளாண் அலுவலர் செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கூட்டுறவு சங்கத்தில் மரவள்ளிக் கிழங்கு பாயின்ட் போடும் இயந்திரம்**

மரவள்ளிக் கிழங்குக்கு பாயின்ட் போடும் இயந்திர தொடக்க விழா ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடந்தது.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வாரம் தோறும் புதன்கிழமை வாழைத்தார் ஏலம் நடக்கிறது. அதேபோல, பொது சேவை மையமும் செயல்படுகிறது. விவசாயிகளுக்கு தேவையான அனைத்து வகை கடன்களும் வழங்கப்படுகிறது. இந்த நிலையில், மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன்பெறும்

வகையில் பாயின்ட் இயந்திரம் வாங்கப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவுக்கு, வங்கித் தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

ஒருவந்தூர் ஊராட்சித் தலைவர் செல்ல.ராசாமணி தொடக்கி வைத்துப் பேசியது: தமிழகத்திலேயே முதன் முதலாக ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் பாயின்ட் போடும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு சரியான முறையில் பாயின்ட் போட்டுத் தர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இடைத் தரகர்கள் இதிலிருந்து ஒழிக்கப்படுவர். விவசாயிகள் பயன்பெறும் வகையில் குறைந்த கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டும் என்றார்.

**நீரில் மூழ்கிய நெல் பயிர்களை காக்கும் வழிமுறைகள் :வேளாண் துறை**

வடகிழக்குப் பருவமழையால் நீரில் மூழ்கிய நெல் பயிர்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்து தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் இரா. ஞானஒளி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்திருப்பது: தொடர் மழையால் சம்பா, தாளடி பருவத்தில் நெல் நடவு செய்யப்பட்டுள்ள வயல்களில் மழைநீர் தேங்கி தற்போது வடிந்து வருகிறது. மழைநீர் சூழ்ந்துள்ள மற்றும் வடிந்துவரும் பகுதிகளில் உள்ள சம்பா, தாளடி பருவ நெல் பயிரைக் காப்பாற்ற செய்நேர்த்தி முறைகளைப் பின்பற்றலாம். வடிகால் வசதியை சீர்செய்து உடனடியாகத் தேங்கியுள்ள மழைநீரை முற்றிலுமாக ஓரிரு நாள்களில் வடியச் செய்து மண்ணில் நல்ல காற்றோட்ட வசதி ஏற்படுத்த வேண்டும்.

இளம் நடவாக இருந்தால் பயிர் கரைந்துவிட வாய்ப்புள்ளதால், அதிகமாகத் தூர் உள்ள இடங்களில் இருந்து தூர்களைப் பிரித்து இடை நடவு செய்து பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க வேண்டும். தண்ணீரில் மூழ்கிய பயிருக்கு மழைநீர் வடிந்தவுடன் உடனடியாகத் தழைச்சத்து அளிப்பது அவசியம். இதற்கு ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை 66 கிலோ ஜிப்சத்துடன் கலந்து, பின்பு 110 கிலோ ஈரமணலுடன் கலந்து 20 மணிநேரம் வைத்து பின்னர் மேலுரமாக வயலில் இடவேண்டும். உடனடியாக தண்ணீர் முழுவதும் வடிய வாய்ப்பில்லாத நிலையில், பயிர் மஞ்சள் மற்றும் பழுப்பு நிறமாகக் காணப்படும். இவ்வாறான பயிருக்கு ஏக்கருக்கு ஒரு கிலோ ஜிங்க் சல்பேட்

மற்றும் 2 கிலோ யூரியாவை 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கலாம். மணற்பாங்கான பகுதிகளில் சாம்பல் சத்தும் நீரில் கரைந்து செல்ல வாய்ப்புள்ளதால், ஒரு சத கரைசல் (2 கிலோ மூரியேடட் ஆப் பொட்டாசை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

தற்போது, இரவு வெப்பநிலை குறைவாக இருப்பதால், மேடான பகுதிகளில் வயலில் உள்ள உர சத்துகளைப் பயிர் எடுத்துக் கொள்வது குறைவாக இருக்கும். இதன் காரணமாக பயிர் மஞ்சளாக மாறும். இந்தக் குறையைச் சரிசெய்வதற்காக ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட் வீதம் நுண்ணுரம் இடுவதால், இக்குறைபாடு தீர்க்கப்பட்டு, நல்ல மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது 50% மானிய விலையில் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களில் ஜிங்க் சல்பேட் கிடைக்கிறது. மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொள்ளலாம்

**மழையால் பாதிக்கப்பட்ட பருத்தி வயல்களில் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் அருகே மழையால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி செடிகளை சார் ஆட்சியர் ப. மதுசூதன் ரெட்டி வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பெரம்பலூர் மாவட்டத்தின் வறட்சி பகுதியான வேப்பந்தட்டை, வேப்பூர் ஆகிய வட்டங்களில் பருத்தி, மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு ஆகிய பயிர்களே விவசாயிகளின் வழ்வாதாரமாக உள்ளது. நிகழாண்டு 25 ஆயிரம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, பருத்தி, மக்காச் சோளம் ஆகியவை அறுவடைக்கு தயாராக இருந்தன. இந்நிலையில், அண்மை தொடர் மழையால் பருத்தி, மக்காச் சோளம் ஆகிய பயிர்கள் முற்றிலும் சேதம் அடைந்து விட்டதாக கூறப்படுகிறது. பருத்தி வயல்களில் தொடர்ந்து தண்ணீர் தேங்கியுள்ளதால் வேர் அழுகல் நோய் ஏற்பட்டுள்ளதோடு, ஈரப்பதம் நீடித்ததால் பருத்திக் காய்களும் விளையாமல் அழுகிக் கொட்டி விட்டன. மழையால் பாதிக்கப்பட்டுள்ள பயிர் குறித்த கணக்கெடுப்பு பணிகள் வேளாண்மை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் மூலம் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், வேப்பூர் வட்டத்துக்குள்பட்ட பெரிய வெண்மணி, காடூர் ஆகிய ஊராட்சிக்குள்பட்ட

கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி செடிகளை பார்வையிட்டு, சேத விவரம் குறித்து சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் கேட்டறிந்த சார் ஆட்சியர் ப. மதுசூதன் ரெட்டி கூறியது: பெரம்பலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள பயிர்களின் விவரம் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. இங்கு, அதிகளவில் பருத்தி சேதமடைந்துள்ளதாக தெரிகிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் உரிய இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தர மாவட்ட நிர்வாகம் சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றார் அவர். இந்த ஆய்வின்போது, கிராம நிர்வாக அலுவலர் வெங்கடேசன், பாரதிய ஜனதா கட்சி தொழிற்சங்க மாவட்டத் தலைவர் ஆர். வரதராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**பூண்டி ஏரியில் இருந்து தண்ணீர் திறப்பு**



சென்னை,

பூண்டி ஏரியில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. பூண்டி ஏரி மழை மற்றும் கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின் கீழ் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து வந்து சேரும் தண்ணீர் பூண்டி ஏரியில் சேமித்து வைக்கப்படுகிறது. இந்த தண்ணீரை தேவைப்படும் போது பூண்டி ஏரியில் இருந்து லிங்க் கால்வாய் மூலம் புழல் ஏரிக்கு திறந்து விடுவது வழக்கம். பலத்த மழை காரணமாக பூண்டி ஏரி தற்போது முழுவதுமாக நிரம்பி கடல் போல் காட்சியளிக்கிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. 3 ஆயிரத்து 231 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். தண்ணீர் நிறுத்தம்

நேற்று மதியம் 1 மணி நிலவரப்படி பூண்டி ஏரியில் நீர் மட்டம் 34.26 அடியாக பதிவானது. 2 ஆயிரத்து 905 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு இருந்தது. ஏரிக்கு வினாடிக்கு 1,336 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் வரத்து வெகுவாக குறைந்ததால் பூண்டி ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது கடந்த 11-ந் தேதி (வெள்ளிக்கிழமை) நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் நேற்று காலை முதல் பூண்டி ஏரியில் இருந்து வினாடிக்கு 530 கனஅடி வீதம் லிங்க் கால்வாய் மூலம் புழல் ஏரிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

**பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது**



பொள்ளாச்சி

மழையின் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாழைத்தார் வரத்து குறைந்தது. வாழைத்தார் ஏலம் பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். இவற்றை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி சென்று விற்பனை செய்கிறார்கள். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. வரத்து குறைந்தது

ஏலத்துக்கு மொத்தம் 1000 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. இதில் பூவந்தார் ஒன்று ரூ.150 முதல் ரூ.350 வரைக்கும், கற்பூரவள்ளி ரூ.200 முதல் ரூ.450 வரைக்கும், செவ்வாழை ரூ.300 முதல் ரூ.800 வரைக்கும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.300 வரையும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.20-க்கும், கதளி ஒரு கிலோ ரூ.20-க்கும் ஏலம் சென்றது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:-

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாரந்தோறும் 1500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வரும். ஆனால் தற்போது மழை பெய்து வருவதால் 1000 தார்களே ஏலத்துக்கு வந்தன. இதனால் கடந்த வாரத்தை விட தாருக்கு ரூ.50 வரை விலை உயர்ந்து உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**கொப்பரை தேங்காய் விலை வீழ்ச்சி: அரசு கொள்முதல் நிலையங்களில் கிலோவுக்கு ரூ.80 நிர்ணயம் செய்ய வேண்டும் விவசாயிகள் கோரிக்கை**



சுல்தான்பேட்டை

கொப்பரை தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் அரசு கொள்முதல் நிலையங்களில் குறைந்தபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.80 நிர்ணயம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர். தென்னை விவசாயம் சுல்தான்பேட்டை வட்டாரத்தில் ஜல்லிப்பட்டி, குமாரபாளையம், வதம்பச்சேரி, தாளக்கரை, அய்யம்பாளையம், பூராண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 15 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இந்த மரங்களில் விளையும் இளநீர், தேங்காய் ஆகியவை கோவை, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மீதமுள்ள தேங்காய்கள் 200-க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி கலன்களில் உடைத்து காய வைத்து கொப்பரை தேங்காயாக மாற்றி காங்கேயம், வெள்ளக்கோவில் ஆகிய பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. கொப்பரை உற்பத்தி பாதிப்பு சுல்தான்பேட்டை மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2 மாதங்களாக மழை பெய்து வருவதால் கொப்பரை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதேபோல் தமிழகம் முழுவதும் தொடர் மழை பெய்து வருவதால் இளநீர் நுகர்வு குறைந்து உள்ளது. இதனால் சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் உள்ள ஆயிரக்கணக்கான தோப்புகளில் பலகோடி ரூபாய் மதிப்பிலான தேங்காய்கள் பறிக்காமல் அப்படியே விடப்பட்டு உள்ளன. மேலும், ஏற்கனவே பறிக்கப்பட்ட தேங்காயில் முளைப்பு ஏற்பட்டு உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:-

தென்னை மரங்களில் 40 முதல் 45 நாட்களுக்கு ஒருமுறை தேங்காய் பறிப்பது வழக்கம். ஆனால் தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாக கடந்த 70 நாட்களாக தென்னை மரங்களில் தேங்காய் பறிக்கப்படவில்லை. இதனால் தேங்காயில் முளைப்பு ஏற்பட்டு உள்ளது. நவீன கருவி வழங்க வேண்டும் 100 தேங்காயை உடைத்து கொப்பரையாக மாற்றினால் 13 கிலோ முதல் 15 கிலோ வரை கிடைக்கும். அதே முளைப்பு திறன் இருந்தால் 10 முதல் 12 கிலோ

மட்டுமே கொப்பரை தேங்காய் கிடைக்கும். கடந்த சில வாரங்களுக்கு முன்பு வெளி மார்க்கெட்டில் கிலோ ரூ.100-க்கு விற்பனை செய்யப்பட்ட கொப்பரை தேங்காய் தற்போது ரூ.66-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் நாங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு உள்ளோம்.

எனவே கொப்பரைக்கு நிரந்தர விலை கிடைக்க அரசு கொள்முதல் நிலையங்களில் கிலோவுக்கு ரூ.80 என்று குறைந்தபட்ச விலையாக நிர்ணயம் வேண்டும். மேலும், தனியார் நிறுவனங்களை போல் உடனடியாக விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா செய்ய வேண்டும். தேங்காய்களை பறிக்க விவசாயிகளுக்கு நவீன கருவி வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**தக்காளியில் இருந்து பழப்பாகு தயாரிப்பது எப்படி? பள்ளி மாணவர்களுக்கு விளக்கம்**



பொள்ளாச்சி,

தக்காளியில் இருந்து பழப்பாகு தயாரிப்பது எப்படி? என்பது குறித்து நகராட்சி பள்ளி மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. விழிப்புணர்வு முகாம் இந்திய பயிர் பதன தொழில்நுட்ப கழகம் மற்றும் மலுமிச்சம்பட்டி எஸ்.என்.எம்.வி. கலை மற்றும் அறிவியல் சார்பில் உணவு பதப்படுத்துதல்

குறித்த விழிப்புணர்வு முகாம் பொள்ளாச்சி நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. முகாமில் இந்திய பயிர் பதன தொழில்நுட்ப கழக இளநிலை ஆராய்ச்சியாளர் சஞ்சய் மற்றும் கல்லூரி இயக்குனர் பாலுசாமி ஆகியோர் தக்காளியை பதப்படுத்தி பழப்பாகு தயாரிப்பது எப்படி? என்பது குறித்து விளக்கம் அளித்தனர். இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:- தக்காளியில் இருந்து பழப்பாகு தக்காளி அதிகளவு உற்பத்தி செய்யப்படும் போதும், விலை குறையும் போது வீணாக சாலையோரத்தில் கொட்டப்படுகிறது. மேலும் மாடுகளுக்கு உணவாக வழங்கப்படுகிறது. தக்காளியை வீணாக்குவதை தடுக்க, அவற்றில் இருந்து பழப்பாகு, ஊறுகாய், ஜெல்லி போன்றவற்றை தயாரிக்கலாம். 20 கிலோ தக்காளியை பதப்படுத்தி பழப்பாகு தயாரிக்க ரூ.25 லட்சம் செலவில் எந்திரங்கள் வாங்க வேண்டும். முதலில் தக்காளியை நன்கு வேக வைக்க வேண்டும். தக்காளியின் தோல் உரிந்த பிறகு, அதை வேறு ஒரு எந்திரத்தில் போட வேண்டும். அந்த எந்திரம் தக்காளியில் இருந்து விதை, தோலை தனியாக எடுத்து விட்டு, சாறை மட்டும் கொடுக்கும். அதை கொண்டு நாம் பழப்பாகு போன்ற பொருட்களை தயாரிக்கலாம். இதேபோன்று அனைத்து பழங்களில் இருந்தும் பழப்பாகு தயாரிக்கலாம். இதன் மூலம் வீணாகும் பொருட்களை கொண்டு, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றலாம். இதுகுறித்து விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினர் மற்றும் சிறு, குறு தொழில்முனைவோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**வத்தலக்குண்டு பகுதியில் தேங்காய் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**



வத்தலக்குண்டு, வத்தலக்குண்டு பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. இந்த பகுதியில் விளையும் தேங்காய்கள் காங்கேயத்திற்கு கொப்பரைக்காகவும், மராட்டியம், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு விற்பனைக்காகவும் அனுப்பப்படுகிறது. கடந்த 5 மாதங்களுக்கு முன்பு ஒரு தேங்காய் ரூ.10 முதல் ரூ.12 வரை விலைபோனது, தற்போது ஒரு தேங்காய் ரூ.5 முதல் ரூ.6 வரையே விற்பனையாகிறது.

மழை பெய்ததால் அதிகளவில் தேங்காய் வரத்து வருவதாலும், ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் அதிகளவில் தேங்காய் வரத்து ஏற்பட்டு அவர்களும் மராட்டியம், குஜராத் மாநிலங்களுக்கு தேங்காயை விற்பனைக்கு அனுப்புவதாலும் அவற்றின்விலை குறைந்து கொண்டே செல்கிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுபற்றி தென்னை விவசாயி ராமச்சந்திரன் கூறுகையில், தென்னை விவசாயத்தில் வரவு செலவு கணக்கு பார்த்தால் தற்போது நஷ்டமே ஏற்படுகிறது, எனவே அரசு தேங்காய் கொப்பரைக்கு விலைநிர்ணயம் செய்ய வேண்டும். தேங்காய் வியாபாரம் இதுவரை சந்திக்காத மோசமான நிலையை எட்டியுள்ளது. கடனை வாங்கி வியாபாரம் செய்த நிலையில் அதை கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது, அரசு தென்னை விவசாயிகளின் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். குறைந்த பட்சம் வட்டியை மட்டுமாவது தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார்.

**புங்கம்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு விழிப்புணர்வு முகாம்**



கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகள் நிரம்பி உள்ளதால் விவசாயிகள் மீன் வளர்ப்பில் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேசிய வேளாண் அபிவிருத்தித்திட்ட நிதி உதவியுடன் மண்டல மீன்வள ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் நிறுவுதல் என்ற திட்டத்தின் கீழ் திலேப்பியா மற்றும் கெண்டை மீன் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு முகாம் புங்கம்பட்டி கிராமத்தில் நடந்தது. இதில் திலேப்பியா மீன் ஆராய்ச்சி தலைவர் சிதம்பரம் கலந்து கொண்டு திலேப்பியா மீனின் உயிரியல் பண்புகள், மீன்வளர்ப்புக்காக இடத்தேர்வு, குளம் தயாரிப்பு, பண்ணைக்கட்டமைப்பு, மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், மீன்களுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவு தயாரிப்பு ஆகியவை குறித்தும், கெண்டை மீன் வளர்ப்புக்கு தேவையான உணவு தயாரிக்கும் முறைகள் குறித்தும் பேசினார். முகாமில் மையம் ஆராய்ச்சி உதவிகள் ஹமீதுல்லா ஷெரீப், சங்கரராம் ஆகியோர் கலந்து கொண்டு செயல்முறை விளக்கம் அளித்தனர். இதில் காவேரிப்பட்டணம் மற்றும் காரிமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**10 ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கின விவசாயிகள் கவலை**



வேதாரண்யத்தில் பெய்த கனமழையால் 10 ஆயிரம் ஏக்கர் சம்பா நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கனமழை

வேதாரண்யம் தாலுகாவில் நேற்று முன்தினம் ஒரே நாளில் பெய்த கனமழையால் 10 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த சம்பா

நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. மேலும் வளவனாற்றில் 2 இடங்களில் உடைப்பு ஏற்பட்டதால் அப்பகுதியில் உள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வளவனாற்றில் ஓந்தி தேவன்காட்டில் உள்ள மரப்பாலம் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டது. இதனால் தென்னடார் பஞ்சநதிக்குளம் செல்லும் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வேதாரண்யத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குளங்கள் நிரம்பின தொடர் மழையால் தாலுகாவில் உள்ள ஏரி, குளங்கள் நிரம்பி வழிகின்றன. ஆற்றில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக குடியிருப்பு மற்றும் வயல்களில் தேங்கியுள்ள வெள்ளநீரை வடியவைக்கும் பணியில் பொதுமக்களும், அரசுதுறை அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். வேதாரண்யம் தாலுகாவில் பெய்த கனமழையினால் 102 ஆடுகளும், 12 மாடுகளும், 6 கன்றுகளும் இறந்துள்ளன எனவும், முழுமையாக 19 வீடுகளும், பகுதியாக 25 வீடுகளும் சேதமடைந்துள்ளதாக வேதாரண்யம் தாசில்தார் தெரிவித்தார்.

**விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் கூடலூர் அரசு பள்ளிகளில் மாணவர்கள் பராமரிக்கும் காய்கறி தோட்டம்**



கூடலூர்,

விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் கூடலூர் அரசு பள்ளிகளில் மாணவர்கள் காய்கறி தோட்டம் அமைத்து பராமரித்து வருகிறார்கள்.

உண்டு உறைவிடப்பள்ளி கூடலூர் தொரப்பள்ளி அரசு உண்டு உறைவிடப்பள்ளிகளில் ஏராளமான பழங்குடியின மாணவ- மாணவிகள் படித்து வருகின்றனர். முதுமலை புலிகள் காப்பக வனப்பகுதியின் அருகே இந்த பள்ளிக்கூடம் அமைந்துள்ளது. சில மாதங்களுக்கு முன்பு பள்ளி கட்டிடத்தை சுற்றி சுற்றுச்சுவர் இல்லாமல் இருந்தது. இதனால் யானைகள் இரவு நேரத்தில் பள்ளி வளாகத்துக்குள் புகுந்து கட்டிடத்தை சேதப்படுத்தி வந்தன. இதைத்தொடர்ந்து பள்ளிக்கூடத்தை சுற்றிலும் பாதுகாப்பு சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. காய்கறி தோட்டம் இந்த நிலையில் பள்ளியில் படிக்கும் மாணவ- மாணவிகள் மத்தியில் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் காய்கறி தோட்டம் அமைக்க திட்டமிடப்பட்டது. இதற்காக பள்ளி தலைமை ஆசிரியை கலாவதி மேற்பார்வையில் மாணவ- மாணவிகள் பீன்ஸ், பாகற்காய், முள்ளங்கி, மிளகாய், கீரை வகைகள் பயிரிடப்பட்டன. வகுப்பு செயல்படும் நேரத்தை தவிர மீதமுள்ள நேரங்களில் மாணவ- மாணவிகள் காய்கறி தோட்டத்தை இயற்கை உரமிட்டு பராமரித்து வருகிறார்கள். தற்போது காய்கறிகள் நன்கு விளைந்தும், கீரைகள் வளர்ந்தும் காணப்படுகிறது. தாங்கள் வைத்து பராமரித்து வந்த செடிகளில் காய்கறிகள் விளைந்து இருப்பதை கண்ட மாணவ- மாணவிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நலிவடையும் விவசாயம் இது குறித்து பள்ளி தலைமை ஆசிரியை கலாவதி கூறும் போது, இன்றைய காலக்கட்டத்தில் விவசாயம் நலிவடைந்து வருகிறது. படிக்கும் காலத்தில் மாணவ- மாணவிகள் இடையே விவசாயம் மீது தனி ஆர்வம் வர வேண்டும் என்பதற்காக மாணவர்களை காய்கறி தோட்டங்கள் அமைக்க பழக்கப்படுத்தி வருகிறோம் என்றார். இதேபோல் கூடலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் 11, 12-ம் வகுப்பு மாணவர்கள் பள்ளி வளாகத்தில் நூல்கோல், முள்ளங்கி, பீன்ஸ், மஞ்சள் போன்ற செடிகளை நடவு செய்து காய்கறி தோட்டம் அமைத்து பராமரித்து வருகின்றனர். இதில் முள்ளங்கி, பீன்ஸ் பயிர்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளது. இயற்கை உரமிட்டு விளைந்த காய்கறிகளை மாணவர்கள், ஆசிரியர்கள் குறைந்த விலைக்கு வாங்கி செல்கிறார்கள். இதுபோல் அனைத்து அரசு பள்ளிக்கூடங்களிலும் காய்கறி தோட்டங்கள் அமைத்து மாணவர்கள் மத்தியில் விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

**ஊட்டியில் தொடர் மழை: முட்டைகோஸ் செடிகள் அழுகின விவசாயிகள் கவலை**



ஊட்டி

ஊட்டியில் பெய்த தொடர் மழைகாரணமாக முட்டைகோஸ் செடிகள் அழுகின. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தொடர்மழை நீலகிரி மாவட்டத்தில் பீன்ஸ், முட்டைகோஸ், பீட்ரூட், கேரட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட காய்கறிகள் அதிகளவு பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு விளையும் காய்கறிகள் தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த நிலையில் ஊட்டியில் கடந்த நவம்பர் மாதம் முதல் தொடர் மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள அணைகள், குளங்கள், குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. மேலும் மண்சரிவு உள்பட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டன. முட்டைகோஸ் இந்த நிலையில் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த கேரட், பீட்ரூட்,

பீன்ஸ், உருளைக்கிழங்கு உள்ளிட்ட காய்கறிகள் அழுக தொடங்கின. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதனிடையே ஊட்டி அருகே உள்ள ஆடாசோலை பகுதியில் பல ஏக்கரில் பயிரிடப்பட்டு இருந்த முட்டைகோஸ் செடிகள் இந்த மழை காரணமாக பெருமளவு அழுகி விட்டன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து வேளாண்மை ஆராய்ச்சியாளரும், விவசாயியுமான பிலோமி கிருஷ்ணன் கூறியதாவது:-

ஒரு ஏக்கருக்கு முட்டைகோஸ் பயிரிட 250 கிராம் முதல் 300 கிராம் விதை தேவைப்படுகிறது. இந்த விதைகள் 32 முதல் 40 நாட்களுக்குள் வளர்ந்து நாற்றாக மாறிவிடும். பின்னர் இதனை விவசாய நிலத்தில் நடவு செய்யப்படும். ரூ.1 லட்சம் வரை நஷ்டம் நடவு செய்யப்பட்டதில் இருந்து 3 மாதங்களில் முட்டைகோஸ் அறுவடை செய்ய முடியும். ஆனால் தற்போது முட்டைகோஸ்கள் அறுவடைக்கு தயாரான நிலையில் தொடர்ந்து மழை பெய் தது. இதன்காரணமாக முட்டைகோஸ் இலைகளில் தண்ணீர் தேங்கி நின்றதால் எளிதாக இந்த முட்டைகோஸ் செடிகள் அழுகி விட்டன. இதனால் விவசாயிகளுக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. ஒரு ஏக்கருக்கு ரூ.1 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. எனவே அரசு விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**லாடபுரம் பச்சைமலை அடிவாரத்தில் ஸ்ரீரங்கம் ரெங்கநாத சுவாமியை அலங்கரிக்கும் சம்பங்கி பூக்கள் சாகுபடி தீவிரம்**



பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டம் லாடபுரம் பச்சைமலை அடிவாரத்தில் ஸ்ரீரங்கம் ரெங்கநாதசுவாமியை அலங்கரிக்கும் சம்பங்கிபூக்கள் சாகுபடி தீவிரமாக நடந்து வருகிறது. சம்பங்கி பூக்கள் சாகுபடி பெரம்பலூர் மாவட்டம் லாடபுரம் பச்சைமலை அடிவாரத்தில் மரவள்ளி கிழங்கு, வெங்காயம், நெல் உள்ளிட்ட பயிர்கள் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. இதில் குறிப்பாக சம்பங்கி பூக்கள் மட்டும் 1,000 ஏக்கரில் தீவிரமாக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ரெங்கநாதசுவாமி கோவில் இது தொடர்பாக சம்பங்கி பூக்கள் பயிரிட்டுள்ள விவசாயி ஒருவர் கூறுகையில், சம்பங்கி பூ விதையை வயல்களில் ஊன்றினால் செடி வளர்ந்து மொட்டுவிடுவதற்கு 8 மாதங்கள் ஆகும். அதனைத்தொடர்ந்து 3 வருடங்களுக்கு தினமும் சம்பங்கி பூக்களை பறித்து பூமார்க்கெட்டுக்கு அனுப்ப முடியும். சம்பங்கி பூ சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நள்ளிரவு 12 மணிக்கு நெற்றியில் அணியும் டார்ச் விளக்குடன் வயலில் இறங்கி அதிகாலை 6 மணி வரை சம்பங்கி பூக்களை பறிக்கின்றனர். பறிக்கப்பட்ட பூக்கள் பெரம்பலூர் மற்றும் ஸ்ரீரங்கம் பூ மார்க்கெட்டுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் இங்கிருந்து பூ மார்க்கெட்டிற்கு அனுப்பப்படும் சம்பங்கி பூக்கள் ஸ்ரீரங்கம் ரெங்கநாதசுவாமிக்கு மாலையாக கட்டி சாற்றப்படுகிறது. இது லாடபுரம் விவசாயிகளுக்கு பெருமை அளிப்பதாக உள்ளது. தரத்திற்கு ஏற்ப... சம்பங்கி பூக்கள் சாகுபடியில் பராமரிப்பு செலவு குறைவு என்பதால், லாடபுரம் பகுதி விவசாயிகள் அதிக அளவில் சம்பங்கி பூக்கள் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர் என்றார். பூ கொள்முதல் செய்யும் மொத்த வியாபாரி ஒருவரை கேட்டபோது, பெரம்பலூர் மாவட்டத்தில் லாடபுரம், அன்னமங்கலம், அரசலூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் சம்பங்கி பூக்கள், கோழிக்கொண்டை, கேந்திப்பூக்கள் ஆகியவை பெரம்பலூர் பூமார்க்கெட்டில் விற்பனை செய்வதற்காக தினமும் காலை 7மணிக்கு முன்னதாக கொள்முதல் செய்கிறோம். தரத்திற்கு ஏற்ப ஒரு கிலோ சம்பங்கி பூக்கள் குறைந்தபட்சம் ரூ.20-க்கும், சீசன் சமயத்தில் அதிகபட்சமாக ரூ.100-க்கும் கொள்முதல் செய்துவருகிறோம். கோழிக்கொண்டை ரூ.60-ல் இருந்து ரூ.100 வரையும் கொள்முதல் செய்துவருகிறோம் என்று தெரிவித்தார்.

**8 வட்டாரங்களில் பெருநகர காய்கறி அபிவிருத்தி திட்ட மையம் தொடக்கம் தோட்டக்கலை துணை இயக்குநர் தகவல்**



சிவகங்கை

சிவகங்கை மாவட்டத்தில் 8 வட்டாரங்களில் பெருநகர காய்கறி அபிவிருத்தி திட்ட மையம் தொடங்கப்பட்டுள்ளதாக மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார். அபிவிருத்தி திட்டம்

சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் விடுத்தள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் சிவகங்கை, மானாமதுரை, திருப்புவனம், இளையான்குடி, திருப்பத்தூர், எஸ்,புதூர், கல்லல், காளையார்கோவில் ஆகிய 8 வட்டாரங்களில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் பெரு நகர சுற்றுப்புற காய்கறி அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடி செய்யவும், குழுக்கள் அமைக்கவும், காய்கறிகளை சேகரம் செய்து சேகரிப்பு மையம் அமைக்கவும், நகரங்களுக்கு கொண்டு செல்ல போக்குவரத்து வாகனங்கள் வாங்குவதற்காகவும் மானியம் வழங்கப்படுகிறது.  சாகுபடிக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிழல் வலை அமைக்க மானியமாக 40 சதவீதம் மற்றும் போக்குவரத்து வாகனம் வாங்க குழுக்களுக்கு 40 சதவீதம் மானியமும் வழங்கப்பட உள்ளது.

மானியம்

இதன்படி சிவகங்கை வட்டாரத்தில் தமறாக்கி மற்றும் அரசனூர் ஆகிய



கிராமங்களில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு இதற்காக தனி குழுக்கள் அமைக்கப்பட்டு காய்கறி சாகுபடிக்காக மானியம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது விளைச்சல் முடிந்து காய்கள் விற்பனைக்கு வந்துள்ளது. இதை மதுரைக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து கத்திரி, மிளகாய், தக்காளி, பஜ்ஜி மிளகாய், பூசணி போன்ற காய்கறிகள் தமறாக்கி மற்றும் அரசனூரில் உள்ள சேகரிப்பு மையங்களில் சேகரிக்கப்பட்டு அவை மதுரையில் விற்பனைக்காக மினி லாரிகள் மூலம் தினந்தோறும் அனுப்பி வைக்கப்படுகிறது. விவசாயிகள் குழு எனவே இத்திட்டத்தின்கீழ் பங்கு பெற விரும்பும் தமறாக்கி மற்றும் அரசனூர் பகுதி விவசாயிகள் தங்களது வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர்களை நேரில் தொடர்பு கொண்டு பயனடையலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார். இதையடுத்து தமறாக்கியில் உள்ள 20 விவசாயிகளை கொண்ட குழு உற்பத்தி செய்து மதுரைக்கு விற்பனைக்கு அனுப்ப வைத்து இருந்த காய்கறிகளை மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராஜேந்திரன் தலைமையில் தோட்டக்கலை உதவி இயக்குநர் வெங்கடேஸ்வரன், தோட்டக்கலை அலுவலர் சத்யா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின் போது தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர் காளிமுத்து, திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெயப்பிரகாஷ், கலாதேவி மற்றும் குழு விவசாயிகள் உடனிருந்தனர்.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அறுவடைக்கு தயார் நிலையில் கரும்புகள்**

தஞ்சாவூர்
பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தஞ்சை மாவட்டத்தில் அறுவடைக்கு தயார் நிலையில் கரும்புகள் உள்ளன. பொங்கல் பண்டிகை தமிழர்களின் பண்டிகைகளுள் முக்கியமான பண்டிகை பொங்கல் பண்டிகை. தை முதல்நாள் கொண்டாடப்படும் அறுவடைத்திருநாளான பொங்கல் பண்டிகை அன்று வீடுகளில் கோலமிட்டு, புதுப்பானையில் பொங்கலிட்டு, கதிரவனுக்கு படையலிட்டு மக்கள் கொண்டாடுவர். இந்த பொங்கல் பண்டிகையில் முக்கிய இடத்தை பிடிப்பது கரும்பு மற்றும் மஞ்சள்கொத்து தான். அதிலும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை மிகவும் விரும்புவது கரும்பை தான். தை பொங்கல் பண்டிகைக்கு 1 மாத காலம் இருக்கிறது. இதனால் இன்னும் சில நாட்களில் கரும்பு விற்பனை தொடங்கி விடும். தஞ்சை மாவட்டத்தில் சூரக்கோட்டை, ஒரத்தநாடு, திருவோணம், வெட்டிக்காடு, திருக்காட்டுப்பள்ளி, திருவிடைமருதூர், அம்மாப்பேட்டை உள்பட பல்வேறு இடங்களில் பொங்கல் பண்டிகையையொட்டி விற்பனை செய்வதற்காக கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இங்கு விளையும் கரும்புகள் சென்னை, திருச்சி, திருவாரூர், நாகை போன்ற மாவட்டங்களுக்கும், தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. கரும்பு அறுவடை...
இந்த நிலையில் தற்போது பொங்கல் பண்டிகைக்கான கரும்புகள் நன்றாக வளர்ந்து தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. சில இடங்களில் அறுவடைக்கு தயாராக உள்ள கரும்புகளில் உள்ள அடித்தோகைகள் அகற்றும் பணிகளும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இன்னும் சில நாட்களில் கரும்பு அறுவடை செய்யும் பணி தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து விவசாயிகள் சிலர் கூறும்போது, ஒவ்வொரு ஆண்டும் தைபொங்கல் அறுவடைக்காக செங்கரும்பு சாகுபடி செய்வோம். கரும்பு முளைத்த 1 மாதத்தில் அடித்தோகையை அகற்றுவோம். அதன் பின்னர் அறுவடை செய்யும் வரை 3 முறை தோகைகளை அகற்றுவோம். கரும்பு சாகுபடி செய்தது முதல் அறுவடை செய்யும் வரை நாங்கள் வேறு எந்த தொழிலுக்கும் செல்வதில்லை. தற்போது சில இடங்களில் கரும்பு தோகைகளை அகற்றி விட்டு அறுவடைக்கு தயார் நிலையில் வைத்துள்ளார்கள். இன்னும் சில நாட்களில் கரும்பு அறுவடைகள் தொடங் கும். எங்களிடம் கரும்பு கேட்டு

வருபவர்கள் கரும்புகளுக்கான தொகையை கொடுத்து விட்டு லாரியை அனுப்புவார்கள். நாங்கள் கரும்பு அறுவடை செய்து விட்டு அவர்களுக்கு ஏற்றி அனுப்பி விடுவோம். கடந்த ஆண்டு 1000 கரும்புகள் ரூ.12 ஆயிரத்து 500 முதல் ரூ.13 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டன. இந்த ஆண்டு இதைவிட கூடுதலாக விற்பனை செய்யப்படும். மழையினால் சில இடங்களில் கரும்பு வளர்ச்சி பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதனால் பாதிக்கப்பட்ட கரும்பிற்கான நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

**தூத்துக்குடியில் மீன் கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கும் பயிற்சி**




தூத்துக்குடி,

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மீன் கழிவுகளை மறுசுழற்சி செய்து மதிப்பூட்டப்பட்ட உரமாக மாற்றும் வகையில், மீன் கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கும் பயிற்சி நடத்தப்பட்டது. தூத்துக்குடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 28 பேர் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். பயிற்சியில் உரம் தயாரித்தலை பற்றிய பல்வேறு வழிமுறைகளும் அதன் பயன்பாடுகளும் விளக்கி கூறப்பட்டது.

நிறைவு விழாவுக்கு கல்லூரி முதல்வர் கோ.சுகுமார் தலைமை தாங்கி பயிற்சி பெற்றவர்களுக்கு கையேடு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். நிகழ்ச்சியில் மீன்வளச் சூழலியல் துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் அ.சீனிவாசன், திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் பா.பத்மாவதி, மற்றும் உதவிப் பேராசிரியர் சா.ஆனந்த் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோட்டூர் பகுதியில் மழையால் சேதம் அடைந்த குறுவை பயிர்கள் அறுவடை விவசாயிகள் விரக்தி**



கோட்டூர்

கோட்டூர் பகுதியில் மழையால் சேதம் அடைந்த குறுவை பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இதில் விளைந்த நெல் கருகி இருந்ததால் விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர். பயிர்களை பாதித்த மழை திருவாரூர் உள்பட காவிரி டெல்டா மாவட்ட பகுதிகளுக்கு நல்ல மழையை கொடுக்கும் பருவ காலமாக வடகிழக்கு பருவ மழை காலம் திகழ்கிறது. இந்த பருவ மழை காலத்தில் திருவாரூர் மாவட்டத்தில் ஓடும் காவிரியின் கிளை

ஆறுகளான வெண்ணாறு, வெட்டாறு, ஓடம்போக்கி, பாமணி, முள்ளியாறு, பாண்டவையாறு, வளப்பாறு, புத்தாறு, திருமலைராஜன் ஆறு, அரசலாறு, அரிச்சந்திராநதி, அடப்பாறு, கந்தபரிச்சான் ஆறு உள்ளிட்ட ஆறுகள் நிரம்பி ஓடும். இந்த ஆறுகளை ஒட்டி அமைந்துள்ள வாய்க்கால்கள், பாசன வடிகால்களிலும் தண்ணீர் ஓட்டம் அதிகமாக இருக்கும். முன்பு இந்த ஆறு, வாய்க்கால்கள், பாசன வடிகால்கள் முறையாக பராமரிக்கப்பட்டதால் சம்பா, குறுவை, தாளடி என முப்பருவ சாகுபடிக்கும் தேவையான அளவு தண்ணீர் வந்தது. அதேநேரத்தில் மழை அதிகமாக பெய்யும்போது ஆறு, வாய்க்கால்கள், வடிகால்களில் வெள்ளம் வடிந்தோடி பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருந்தது.

ஆனால் கடந்த சில ஆண்டுகளாக வடகிழக்கு பருவமழை காலத்தில் ஆறுகள், குளங்கள், பாசன வடிகால்கள், வாய்க்கால்கள் வெள்ளத்தால் நிறையும்போது வயல்களுக்குள் தண்ணீர் புகுந்து பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. வயல்களில் வெள்ளம் திருவாரூர் மாவட்டம் கோட்டூரில் இந்த ஆண்டு வழக்கத்துக்கு மாறாக கன மழை தொடர்ந்து பல நாட்கள் பெய்தது. இதனால் கடந்த மாதம் (அக்டோபர்) நடவு செய்யப்பட்டு, கதிர்வரும் பருவத்தை எட்டி இருந்த சம்பா பயிர்கள் பாதிக்கப்பட்டன. சம்பா வயல்களில் மழை வெள்ளம் குளம்போல் தேங்கியது. கோட்டூர் பகுதியில் பொன்னுகொண்டான் ஆறு, கோரையாறு, அரிச்சந்திராநதி, அடப்பாறு உள்ளிட்ட ஆறுகளால் பாசனம் பெறும் களப்பால் குலமாணிக்கம், புழுதுகுடி, காடுவாகொத்தமங்கலம், கெழுவத்தூர், மண்ணுக்குமுன்டான், குறிச்சி, மானாங்காத்தான்கோட்டகம், காடுவாகுடி, அன்னுகுடி, ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வயல்களில் தற்போது தான் ஓரளவுக்கு மழை வெள்ளம் வடிய தொடங்கி இருக்கிறது. பல நாட்களாக தண்ணீரிலியே மூழ்கி இருந்ததால் பயிர்கள் அழுகிய நிலையில் காட்சி அளிப்பதாக விவசாயிகள் வேதனையுடன் கூறுகிறார்கள். குறுவை அறுவடை கோட்டூர் அருகே உள்ள தெற்குநாணலூர், திருக்களார், குறிச்சி, வாட்டார், குலமாணிக்கம், சித்தமல்லி, கும்மட்டிதிடல், பாலையூர், செந்தாமரைக்கண் உள்ளிட்ட இடங்களில் நேரடி நெல் விதைப்பு முறையில் குறுவை சாகுபடி நடைபெற்று இருந்தது. இங்கு ஆடுதுறை 35 ரக குறுவை ரக பயிர்கள் நடப்பட்டிருந்தன. இவை அறுவடைக்கு தயாராக இருந்த

நிலையில் மழை நீரில் மூழ்கின. தற்போது மழை குறைந்து வெள்ளம் வடிய தொடங்கி விட்ட நிலையில் விவசாயிகள் அறுவடை பணியை தொடங்குவதற்காக குறுவை பயிரை பார்த்தபோது அவற்றில் இருந்த நெல் கருகி விட்டது தெரியவந்தது. இதையடுத்து அப்பகுதிகளில் விவசாயிகள் உடனடியாக குறுவை அறுவடையை தொடங்கி உள்ளனர். நேற்று தெற்குநாணலூர், குலமாணிக்கம் உள்ளிட்ட இடங்களில் பாதிக்கப்பட்ட குறுவை பயிரை அறுவடை செய்யும் பணி நடந்தது. இப்பணியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் கூறியதாவது: மகசூல் இல்லை பலத்த மழையால் இந்த ஆண்டு நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடைக்கு தயாராக இருந்த குறுவை பயிர் கடுமையாக சேதம் அடைந்திருக்கிறது. மழை குறைந்த பின்னர் வயலில் இருந்து தண்ணீர் வடிவதற்கே 4 நாட்களுக்கு மேலாகி விட்டது. இதனால் அறுவடை தாமதமாக நடக்கிறது. நீண்ட நாட்களாக மழைநீருக்குள் மூழ்கி இருந்ததால் அறுவடை செய்யப்பட்ட பயிர்களில் நெல் கருகிய நிலையில் காட்சி அளிக்கிறது. கருகிய நெல்லை எப்படி? எங்கே? விற்பனை செய்வது என தெரியவில்லை. முன்பெல்லாம் அறுவடை பணியில் ஈடுபடும் விவசாய தொழிலாளர்களுக்கு நெல்லையே ஊதியமாக கொடுப்போம். அவர்களும் மகிழ்ச்சியாக பெற்று கொள்வார்கள். கோட்டூர் பகுதியில் இத்தனை ஆண்டுகளாக இதுதான் நடைமுறை. ஆனால் இந்த ஆண்டு நெல் கருகி விட்டதால், அதை தொழிலாளர்களுக்கு ஊதியமாக கொடுக்க இயலவில்லை. பணத்தை ஊதியமாக கொடுத்து வருகிறோம். மகசூலே இல்லாத நிலையில் ஊதியம் கொடுத்து அறுவடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

பராமரிக்க வேண்டும் : பயிருக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு ஆறு, வாய்க்கால்கள், பாசன வடிகால்கள், மதகுகளை முறையாக பராமரிக்காதது காரணம். எனவே இனிவரும் காலத்திலாவது ஆறு, வாய்க்கால்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அவற்றை முறையாக தூர்வார வேண்டும். மழை காலத்தில் ஆறுகளில் வரும் வெள்ளத்தை முறைப்படி தேக்கி வைத்து, முன்பு நடந்ததுபோல ஆண்டுக்கு 3 போக சாகுபடியும் நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

**விவசாய நிலங்களுக்குள் யானைகள் வராமல் இருக்க என்ன வழிகளை பின்பற்ற வேண்டும்? விழிப்புணர்வு கூட்டத்தில் விவசாயிகளுக்கு விளக்கம்**



விவசாய நிலங்களுக்குள் யானைகள் வராமல் இருக்க என்ன வழிகளை பின்பற்ற வேண்டும் என விழிப்புணர்வு கூட்டத்தில் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. விழிப்புணர்வு கூட்டம் ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விளைநிலங்கள் உள்ளன. வறட்சி காலங்களில் வன விலங்குகள் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்வது தொடர்கதையாகி வருகிறது. இதனால் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதை தடுக்கும்விதமாக, ராஜபாளையம் மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள அரவிந்த் ஆசிரம வளாகத்தில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார் முன்னிலை வகித்தார். இதில் ஸ்ரீவில்லிபுத்தூர் வனசரக அதிகாரி பால்பாண்டி, ராஜபாளையம் வனசரக அதிகாரி பாலசுப்பிரமணியன், ஊட்டி அரசு கல்லூரி வனவிலங்கு பேராசிரியர் ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழக வனத்துறையின் உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் ஏற்பாடு

செய்யப்பட்டிருந்த இந்த கூட்டத்தில் வத்திராயிருப்பு, விருதுநகர், அருப்புக்கோட்டை, கூமாபட்டி, சேத்தூர் உள்பட பல கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். தடுக்கலாம் கூட்டத்தில், வனத்துறையில் கால்நடை மருத்துவராக பணியாற்றி ஓய்வு பெற்ற சண்முகசுந்தரம் வன விலங்குகளின் வாழ்க்கை முறை, வறட்சி காலங்களில் அவற்றின் நடவடிக்கைகள், அதன் உணவு பழக்க வழக்கங்கள் முறைகளை விளக்கினார். மேலும் வறட்சி காலங்களில் யானைகள் விவசாய நிலங்களுக்குள் புகாதவகையில் தடுக்க நிலங்களை சுற்றி அகழி வெட்ட வேண்டும், மின்சார வேலி அமைப்பதன் மூலமும் யானைகளை தடுக்கலாம்.

இல்லையேல் சாணத்தில் மிளகாய் பொடி கலந்து வரட்டிகளை தயாரித்து புகை ஏற்படுத்துவதன் மூலம் அல்லது வாசனை அதிகம் உள்ள யானைகளுக்கு பிடிக்காத பயிர்களை நிலங்களின் ஓரத்தில் வளர்ப்பதால் அதன் வழியை மாற்ற முடியும் என விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் இதுகுறித்த சந்தேகங்களை விவசாயிகள் அதிகாரிகளிடம் கேட்டு விளக்கம் பெற்றனர்.

தினகரன்

**உடலை காக்கும் நெல்லிக்காய்**



தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால், டாக்டரைத் தேடிப்போக வேண்டியது இல்லை என்று சொல்வார்கள். இன்றைய விலைவாசியில் டாக்டரைத் தேடிப் போவதும் ஆப்பிளைத் தேடிப் போவதும் ஒன்றுதான். ஆப்பிளுக்கு மாற்றாக தினம் ஒரு நெல்லிக்கனி சாப்பிட்டால் போதும். ஆப்பிளுக்கு நிகரான சத்துக்களைக்கொண்டது நெல்லிக்காய்; "நெல்லிக்காயில் ஸ்பெஷல் என்று ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல முடியாது. நெல்லிக்காயே ஸ்பெஷல்தான்..." என்கிறார் டயட்டீஷியன் ஹேமமாலினி. இருவரும் நம்மிடம் பகிர்ந்துகொண்ட தகவல்களில் இருந்து... 1. 'காயம் என்ற நம் உடலைக் கற்பகம்போல் அழியாமல் வைத்திருக்கும் ஆற்றல்கொண்டது நெல்லிக்காய்' என்று சித்தர்களே சொல்லி இருக்கிறார்கள். நெல்லிக்காயில் கால்சியம், வைட்டமின் சி, புரதம் போன்ற சத்துக்கள் அதிகமாக இருப்பதுபோலவே டேனின், ஃப்ளேவனாய்ட்ஸ், எலாஜிக் ஆசிட் போன்ற துணை சத்துப் பொருட்களும் அதிக அளவில் இருக்கின்றன.

2. சித்தா, ஆயுர்வேதம் போன்ற இயற்கை மருத்துவங்களில் நெல்லிக்காயைத் தவறாமல் பயன்படுத்துகிறார்கள். வயிறு சம்பந்தப்பட்ட நோய்களைக் கட்டுப்படுத்தும் 'திரிபலா' சூரணத் தயாரிப்பில் நெல்லிக்காய்க்கு முக்கியப் பங்கு உண்டு. 3. கொதிக்கும் இந்த வெயில் காலத்துக்கு, நெல்லிக்காய் ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம். உடலுக்கும் கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும் குணமுடையது என்பதால் ஜலதோஷத்தை உண்டாக்கிவிடும் என்று சிலர் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் ஜலதோஷம் வராமல் நெல்லிக்காய் தடுக்கும். இது தவிர வைரஸ் மூலம் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தும். 4. திராட்சை, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற பழங்களில் வைட்டமின் சி இருக்கிறது. ஆனால், வேறு எந்தப் பழங்களிலும் இல்லாத அளவுக்கு நெல்லிக்காயில் வைட்டமின் சி மிக அதிகம். ஒரு சின்ன நெல்லிக்காயில் 600 மில்லி கிராம் வைட்டமின் சி இருக்கிறது. நம் நாட்டில் இரும்புச் சத்துக் குறைபாடு உடையவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். வைட்டமின் சி அதிகமாக நெல்லிக்காயில் இருப்பதால் காய்கறியில் இருக்கும் இரும்புச் சத்தை ஈர்த்து உடலுக்குக் கொடுக்கும். 5. தயிர் சாதம், சாம்பார் சாதம் போன்ற சாதங்கள் சாப்பிடும்போது வெறும் நெல்லிக்காயைத் தொட்டுக்கொண்டு சாப்பிடலாம். இதன் மூலம் அதில் இருக்கும் துவர்ப்புத் தெரியாது. நெல்லிக்காயைப் பெரும்பாலும் ஊறுகாயாகப் பயன்படுத்துகிறோம். ஆனால், பச்சைக் காயாகச் சாப்பிடும்போதுதான் நெல்லிக்காயின் சத்துகள் முழுமையாகக் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று நெல்லிக்காயாவது சாப்பிடலாம். 6. நெல்லிக்காயில் கால்சியம் சத்து நிறைய இருப்பதால், எலும்புகள் உறுதியாகும். ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கவைக்கும். ரத்த சோகைக்கும் நெல்லிக்காய் நல்ல மருந்து. நெல்லிக்காய் தலைமுடியைக் கருமையாக செழிப்பாக வளரவைக்கும் என்பதால்தான் கூந்தல் வளர்ச்சிக்கு உதவும் எண்ணெய் வகைகளிலும் தலைச் சாயத் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படுகிறது. 7. தினமும் ஒரு நெல்லிக்காய் உண்டுவந்தால், சர்க்கரைக் குறைபாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடலாம். அதிக உடல் பருமனால் கஷ்டப்படுகிறவர்கள் காலையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காய்ச் சாறுடன் இஞ்சிச் சாறு

அருந்திவந்தால் தேவையற்ற எடை குறைந்து சிக்கென்ற தோற்றத்தைப் பெறலாம்.

8. நெல்லிக்காயுடன் புதினா, இஞ்சி, எலுமிச்சை சேர்த்து பழரசமாக்கி அருந்தினால் வயிற்றுக் கோளாறுகள் நீங்கும். காயங்களைக் குணப்படுத்தவும் புற்றுநோய் எதிர்ப்பு வல்லமையும் நெல்லிக்காய்க்கு உண்டு.

9. நெல்லிக்காயைத் துவையல் செய்தும் சாப்பிடலாம். சீரகம், பூண்டு, சின்ன வெங்காயம் போன்றவற்றைச் சேர்த்து நெல்லிக்காய் உடன் துவையல் செய்து சாப்பிட்டால், ரத்தத்தில் கொழுப்பின் அளவு சீராகும். கொழுப்பைக் கட்டுப்படுத்துவதால் இதய சம்பந்தமான நோய்கள் வராமல் தடுப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. கண்களுக்கு மிகவும் நல்லது.

10. கீழாநெல்லி, கரிசலாங்கண்ணியுடன் நெல்லிக்காய் சேர்த்து செய்யும் மருந்து மஞ்சள் காமாலையைக் குணப்படுத்தும் வல்லமை கொண்டது.

**மேட்டூர் அணை நீர்மட்டம் உயர்வு**




மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.32 அடியாக அதிகரித்தது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 3,639 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று 3,103 கனஅடியாக குறைந்தது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 700 கனஅடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது.

நீர்வரத்தை விட, திறப்பு குறைவாக உள்ளதால் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 96.20 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 96.32 அடியாக அதிகரித்தது. அணையில் நீர் இருப்பு 60.17 டிஎம்சி.

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கிடு கிடு உயர்வு




திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மொத்த காய்கறி மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. திண்டுக்கல் சுற்றுவட்டாரங்களில் கடந்த சில தினங்களாக பெய்த கனமழை காரணமாக பிஞ்சுகள் உதிர்ந்ததோடு மற்றவை அழுகியதால் காய்கறிகளின் உற்பத்தி முற்றிலும் குறைந்தது. இதனால் ஒட்டன்சத்திரம் அங்காடிக்கு வரும் காய்கறிகளின் வரத்து கணிசமாக சரிந்துள்ளதோடு அவற்றின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ முருங்கைகாய் ரூ.80-க்கும், வெள்ளை கத்திரிக்காய் ரூ.90-க்கும், விற்பனை ஆகிறது. அதே வேளையில் சின்ன வெங்காயத்தின் விலை கணிசமாக சரிந்துள்ளது. மழை காரணமாக விளைநிலங்களிலேயே வெங்காயம் அழுகிவிட்டதால் அதனை வாங்க வியாபாரிகள் மறுப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

இழப்பை ஈடுகட்டும் விதத்தில் அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும்

அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனிடையே மழை காரணமாக குறைந்துள்ள காய்கறிகளின் வரத்து மீண்டும் பழைய நிலைக்கு திரும்ப ஒரு மாத காலம் ஆகும் என்றும் அதன் பிறகு காய்கறிகளின் விலை கட்டுக்குள் வரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**முகப்பருவை போக்கும் சம்பங்கி**




மன அழுத்தம், தலைவலியை போக்க கூடியதும், காய்ச்சலை தணிக்கும் தன்மை கொண்டதும், முகப்பருவை போக்க கூடியதும், பொடுகு தொல்லையில் இருந்து விடுபட வைப்பதும், புண்களை ஆற்ற கூடியதும், முடி உதிர்வதை தடுக்கும் தன்மை கொண்டதுமான சம்பங்கியை பற்றி நாம் பார்ப்போம்.

நில சம்பங்கி என்று அழைக்கப்படும் இது மிகுந்த மணத்தை தருவதுடன் உன்னதமான மருத்துவத்தை உள்ளடக்கியது. எல்லா காலங்களிலும் மார்க்கெட்டில் எளிதாக கிடைக்க கூடியது. நுகரும்போது மனத்துக்கு இதத்தையும், மூளைக்கு சாந்தத்தையும் தருகிறது. சம்பங்கியை உணவாக, மருந்தாக பயன்படுத்துவதால் உள் உறுப்புகள் பலப்படும். இது பல்வேறு நோய்களை குணமாக்குகிறது. சம்பங்கி பூ, இலை, தண்டுகள் மருந்தாக பயன்படுகிறது.

சம்பங்கி பூக்களை பயன்படுத்தி மன அழுத்தத்தால் ஏற்படும் தலைவலி, தூக்கமின்மைக்கான தேனீர் தயாரிக்கலாம். ஒரு வேளை தேனீர் தயாரிக்க 5 பூக்கள் வரை எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் சிறிது இஞ்சி, சிறிது

பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிகட்டி காய்ச்சிய பால் சேர்த்து குடித்தால் சளி, இருமல், செரியாமை சரியாகும். உடல் வலியை போக்குகிறது. உடலில் ஏற்படும் உஷ்ணம் மற்றும் காய்ச்சலை தணிக்கிறது. சம்பங்கி இலைகளை பயன்படுத்தி பொடுகை போக்குவதற்கான தைலம் தயாரிக்கலாம். சம்பங்கி இலைகளை நன்றாக மசித்து எடுத்துக் கொள்ளவும். அதனுடன் சிறிது நல்லெண்ணெய் விட்டு தைலப்பதத்தில் காய்ச்சி எடுக்கவும். இதை தலையில் தேய்த்து குளிப்பதன் மூலம் பொடுகு தொல்லை இருக்காது. வாரம் ஒருமுறை அல்லது இரண்டு முறை தலைக்கு தேய்த்து குளிக்கலாம். தலைமுடி கொட்டுவது நின்று முடி வளரும். சம்பங்கி பூக்களை பயன்படுத்தி புண்கள் மற்றும் சிராய்ப்பு காயங்களுக்கான தைலம் தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: சம்பங்கி பூக்கள், தேங்காய் எண்ணெய், மஞ்சள். சம்பங்கி பூக்களை நன்றாக மசித்து எடுக்கவும். அதனுடன் சிறிது தேங்காய் எண்ணெய், சிறிது மஞ்சள் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இந்த தைலமானது காயங்களை சீல் பிடிக்காமல் சீக்கிரம் ஆற்றும். சம்பங்கி பூக்களை அரைத்து, அதனுடன் மஞ்சள் சேர்த்து முகப்பருவின் மீது பூசி வந்தால், முகப்பரு மறைந்து போகும்.

பல்வேறு நன்மைகளை கொண்ட சம்பங்கி பூவை கூந்தலுக்கு சூடுவதால் மனம் இதமாகிறது. சம்பங்கி தோல்நோய்களால் ஏற்படும் அரிப்பை குணப்படுத்த கூடியது. நீர் கொப்புளங்கள், கட்டிகள், புண்கள் குணமாகும். மன உளைச்சலுக்கு மருந்தாகிறது. பூக்களை தேனீராக்கி குடிப்பதன் மூலம் வயிற்று வலி, பால்வினை நோய், காய்ச்சல், தலைவலி சரியாகும். வயிற்று கடுப்பை போக்க கூடிய அற்புத மருந்தாக பயன்படுகிறது.

**மூலிகை மந்திரம்: முருங்கை**



வேப்பிலை, வில்வம், துளசி, அருகு, வன்னி, எருக்கு, மஞ்சள், கரும்பு, தாமரை போன்ற வற்றையும் இன்னபிறமூலிகைகளையும் பிரசாதமாகவோ, வழிபடு பொருளாகவோ இறை வழிபாட்டோடு இணைத்தனர் நம் முன்னோர். மூலிகைகளின் முக்கியத்துவம் கருதி அவற்றை நாம் தவிர்த்து விடாமல் இருக்கும் பொருட்டே இவ்வாறு செய்துள்ளனர். அந்த வகையில் முருங்கைக்கீரை இல்லாமல் முருகப்பெருமானின் கிருத்திகை வழிபாடு முடிவதில்லை என்பதை நாம் அறிவோம். முருகன் என்றால் அழகன், முப்பது வயது உடையவன் என்கிறது தமிழ் மருத்துவம். அதனால்தான் முருகன் + கை + காய் என்று முருங்கைக்காயைச் சொன்னார்கள். முருகனைப் போல அழகையும் இளமையையும் தரும் குணம் கொண்டது என்ற அர்த்தத்திலேயே அப்படிச் சொன்னார்கள். இந்தியா, பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் பயிராக வளர்கிறது முருங்கை. இவற்றில் காட்டு முருங்கை, கொடி முருங்கை, தவசு முருங்கை என பல வகைகள் உள்ளன. முருங்கையின் அனைத்து பாகங்களும் உணவாகவும் மருந்தாகவும் பயன்தர வல்லது.முருங்கையினுடைய தாவரப்பெயர் Moringa oleifera. ஆங்கிலத்தில் Drumstick. ஆயுர்வேதத்தில் ஷிக்ரு, மது ஷிக்கு, ஷோபான்ஜனா, தீக்ஷ்ண கந்தா என்பர். முருங்கையின் பயன்கள் : முருங்கை மரத்தினுடைய எல்லா பாகங்களும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முருங்கையின் பூக்கள் உடலுக்கு உரத்தைத் தரவல்லவை. மாதவிலக்கைத் தூண்டி ஒழுங்குபடுத்தக்கூடியது.

வேர்ப்பட்டை தொற்று நோய்க்கிருமிகளைத் துரத்த வல்லது. வீக்கத்தைக் கரைக்க வல்லது. வலியைத் தணிக்கக்கூடியது. முருங்கைப்பட்டை பூஞ்சைக் காளான்களைப் போக்கவல்லது. நுண்கிருமிகளை நீக்கவல்லது. முருங்கையின் இளம்பட்டையும் பூக்களும் ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவைக் குறைக்க வல்லவை. முருங்கை விதைகள் உள்ளுக்கு உணவாகும். கடுப்பைத் தணிக்கக் கூடியது. சிறுநீரைப் பெருக்கக்கூடியது. பால்வினை நோய்களின்போது பயன்தர வல்லது.இந்திய ஆயுர்வேத மருத்துவ நூல், உலர்ந்த முருங்கையின் வேர்ப்பட்டையை கழலை நோய்க்கும், சிறுநீரில் சர்க்கரை வெளியாவதற்கும், ரத்தத்தில் கொழுப்பு சேர்ந்துவரும் தொல்லைகளுக்கும் நல்ல மருந்தாக சிபாரிசு செய்கிறது. முருங்கையின் இலை, விதைகள், வேர்ப்பட்டை, மரப்பட்டை சீழ்பிடித்த புண்களை ஆற்றவும், மூலம், பௌத்திரம் போன்ற நோய்களைப் போக்கவும் சிபாரிசு செய்கிறது.100 கிராம் முருங்கையில் சுண்ணாம்புச்சத்து 435 மி.கி. அளவும், பாஸ்பரஸ் 70 மி.கி. அளவும், இரும்புச்சத்து 7 மி.கி. அளவும், நீர்ச்சத்து 76% அளவும், புரதச்சத்து 6.7% அளவும், கொழுப்புச்சத்து 1.6% அளவும், தாது உப்புகள் 2.2% அளவும், வைட்டமின் சி சத்து 220 மி.கி. அளவும், சிறிதளவு பி.காம்ப்ளக்ஸ் சத்தும், நார்ச்சத்து சிறிதும் அடங்கியுள்ளன. முருங்கைக்கீரையின் மருத்துவப் பயன்கள் முருங்கைக்கீரையை உணவோடு அடிக்கடி சேர்த்துக்கொள்வதால் வயிற்றுப்புண்கள் குறிப்பாக உணவுப் பாதையில் உள்ள புண்கள் வெகு விரைவாக ஆறும். முருங்கைக்கீரை அடிக்கடி தலைவலி வருவதைத் தடுத்து நிறுத்துவதோடு ரத்தம் கலந்து மலம் வெளியாவதைத் தடுத்து நிறுத்தும். முருங்கைக்கீரை ரத்தத்தை சுத்திகரிக்கும் தன்மையுள்ளது. ரத்தத்தில் கலந்துள்ள நச்சுக்களை வெளியேற்றும் பணிக்கும் உதவுகிறது. முருங்கைக்கீரையில் வைட்டமின்கள் ஏ,சி, அபரிமிதமான அமினோ அமிலங்கள், சுண்ணாம்புச்சத்து ஆகியன அதிகம் அடங்கியுள்ளன.

முருங்கை இலைச்சாறு மலச்சிக்கலைப் போக்கி குடலைச் சுத்திகரிக்க உதவுகிறது. முருங்கைக்கீரையில் உள்ள பொட்டாசியம் மூளை வளர்ச்சிக்கும் நரம்பு மண்டலங்களின் ஆரோக்கியத்துக்கும் பெரிதும் உதவுகிறது.

இளம் தாய்மார்கள் அடிக்கடி முருங்கைக்கீரையினை உணவோடு சேர்த்துக் கொள்வதால் போதிய தாய்ப்பால் சுரக்க ஏதுவாகிறது. கர்ப்பிணிகளுக்கும் ஆரோக்கியம் தரவல்லதாக முருங்கைக்கீரை அமைகிறது.

முருங்கைக்கீரை எலும்புகளுக்கு பலம் தருவதாகவும் இளஞ்சிறார்களின் எலும்புகள் உறுதி பெறவும் சத்துள்ள உணவுப் பொருளாக விளங்குகிறது.

முருங்கைக்கீரை ரத்தத்தில் சேர்ந்திருக்கும் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த வல்லது. சர்க்கரை நோயாளிகள் வாரத்தில் மூன்று நாட்களாயினும் முருங்கைக்கீரையை உணவுடன் சேர்த்துக்கொள்வதால் சர்க்கரையின் அளவு கட்டுக்குள் வரும். முருங்கைக்கீரை கை, கால்களில் ஏற்படும் வீக்கத்தைக் கரைத்துச் சீர்செய்யும். முருங்கைக்கீரை சத்துள்ள உணவாக இருப்பதால் தலைமுடி உதிர்வதைத் தடை செய்வதோடு இளநரையையும் போக்குகிறது. பொடுகு பிரச்னைக்கும் முருங்கைக் கீரை அருமருந்தாகிறது.

முருங்கைக்கீரை உடல் வெப்பத்தைத் தணிக்க உதவி செய்கிறது. இதனால் கண்கள் சிவந்து போதல், தலைவலி போன்ற தொல்லைகள் வராத வண்ணம் காக்கப்படுகிறது.

முருங்கைக்கீரையின் சூப் மூட்டுகளின் தேய்மானத்தை சரி செய்கிறது. வாய்ப்புண், வயிற்றுப்புண், காய்ச்சல், கண் நோய்களையும் குணமாக்குகிறது.

முருங்கை மருந்தாகும் விதம் முருங்கை இலைச்சாற்றுடன் (10 முதல் 20 மி.லி.) சம அளவு எலுமிச்சைச்சாறு சேர்த்து அன்றாடம் காலை வேளையில் குடித்து வருவதால் சத்துக் குறைபாடு, ரத்த சோகை, இருமல், ஆஸ்துமா, நரம்புத்தளர்ச்சி, தோலின் வறட்சி ஆகியன குணமாகும்.

முருங்கை இலைச்சாற்றுடன் தேனும் இளநீரும் சேர்த்துக் குடிப்பதால் இழந்த உடல் ஆரோக்கியமும் பலமும் திரும்பக் கிடைக்கும்.

கண் நரம்புகள் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தூங்கச் செல்லும்முன் முருங்கைக்கீரைச் சாறும் தேனும் கலந்து கொடுத்தால் பார்வை கூர்மை பெறும்.

நாய், பூனை போன்ற விலங்குகள் கடித்தஉடன் முருங்கைக்கீரையோடு இரண்டு பல் பூண்டு, சிறிது மஞ்சள், உப்பு, மிளகு இவைகளைச் சேர்த்து அரைத்து உள்ளுக்கு சிறிது கொடுப்பதுடன் கடிபட்ட இடத்தில் சிறிதளவு தடவிவர நஞ்சு முறியும்... புண்ணும் விரைவில் ஆறிவிடும்.

முருங்கைக்கீரையை இடித்துச் சாறெடுத்து அதனோடு மிளகைப் பொடித்து சேர்த்துக் குழைத்து நெற்றியின் மீது பற்றாகப் பூசி வைக்க தலைவலி விரைவில் தணியும்.

அடிபட்டதாலோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களாலோ ஏற்பட்ட வீக்கங்கள் மீது முருங்கைக்கீரையை அரைத்து மேற்பற்றாகப் பூச வீக்கம் வற்றும்.

முருங்கைப்பூ பிஞ்சான உடன் சேகரித்து தோலோடு சமைத்து சாப்பிட்டு வர மிகுந்த உடல் வெப்பத்தைத் தணித்து ஆண்மையை அதிகரிக்கச் செய்யும்.

முருங்கை விதையைப் பொடித்து தேன் சேர்த்து அந்தி சந்தி என இருவேளை சாப்பிட்டுவர, நீர்த்துப்போன விந்து கெட்டிப்படும். ஆண்மை அதிகரிக்கும்.

முருங்கைப்பட்டையை இடித்து சாறெடுத்து அதனுடன் குப்பைமேனி சாறு சேர்த்து தேங்காய் எண்ணெயிலிட்டுக் காய்ச்சி சொறி, சிரங்கு கரப்பான் ஆகிய தோல் நோய்களின் மீது பூசிவர விரைவில் குணமாகும்.

முருங்கைப் பிசினை எண்ணெயில் இட்டுக் கரைத்தோ அல்லது காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டோ ஓரிரு சொட்டுகள் காதில் விட்டுவர காது புண்கள் ஆறும். முருங்கைப் பிசினைப் பாலில் இட்டுக் கரைத்து இரண்டு பக்க கன்னப் பொறியின் மீதும் பூசி வைக்க விரைவில் தலைவலி தணியும். இதையே

நெறிக்கட்டிகளின் மீதும் பூசி வைக்க வீக்கமும் வலியும் குணமாகும்.எளிதாகப் பயிராகி தன் முழுப்பகுதியையும் மருந்தாக நமக்குத் தரும் முருங்கையை கடவுளுக்குப் படைக்கும் உயர்நிலையில் வைத்தது மிகவும் பொருத்தம் உடையதுதான்.

**நெல் அறுவடையில் இயந்திரம் வைக்கோல் கிடைக்கவில்லை விவசாயிகளுக்கு வருமானம் இழப்பு**

உடுமலை,: அமராவதி பாசனத்தில் 9 ஆயிரம் ஏக்கரில் நெல் அறுவடை நடக்கிறது. இயந்திரத்தால் பணி நடப்பதால் வைக்கோல் நாசமானது. இதனால் வருமானத்தை இழந்து விவசாயிகள் தவிக்கின்றனர். அமராவதி அணையில் இருந்து பழைய பாசனத்துக்கு ஆற்றில் கடந்த ஜூலை மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. குமரலிங்கம்,சர்க்கார் கண்ணாடிப்புத்தூர்,சோழமாதேவி, கணியூர்,கடத்தூர்,காரத்தொழுவு ஆகிய வாய்க்கால் பகுதிகளில் 7500 ஏக்கர் நிலத்திலும்,கல்லாபுரம்,ராமகுளம் ராஜவாய்க்கால் பாசனத்தில் 1500 ஏக்கரிலும் நெல் பயிரிடப்பட்டது. தற்போது நெல் அறுவடை நடக்கிறது. தொழிலாளர்கள் பற்றாக்குறையால் இயந்திரத்தின் உதவியால் நெல் அறுவடை நடக்கிறது. இதன் காரணத்தாலும், வயலில் ஈரத்தன்மை அதிகம் இருப்பதாலும் நெற்கதிர்களை மட்டுமே விவசாயிகளால் பெற முடிந்தது. வைக்கோல்கள் நாசமாகி விட்டன. ஒரு ஏக்கருக்கு 50 கட்டு வரை வைக்கோல் கிடைக்கும். ஒரு கட்டு வைக்கோல் ரூ.60 வரை விற்கப்படும். எனவே விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.3 ஆயிரம் வரை வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

**பாரம்பரிய உணவு பயிர்களை மீண்டும் பயிரிட வேண்டும்**

விவசாயிகள் தங்களின் பாரம்பரிய உணவு பயிர்களை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் என பருவநிலை மாற்றம் தொடர்பான கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. பருவநிலை மாற்றத்திற்கான நீதியை நிலை நாட்டிடவும், நியாயமான வர்த்தகத்தை உருவாக்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் தன்னார்வலர் புஷ்பநாத், புதுச்சேரி துவங்கி நீலகிரி வரை 480 கி.மீ., தூரம் நடைபயணம் மேற்கொண்டார். நேற்று அவர் தனது நடைபயணத்தை ஊட்டியில் நிறைவு செய்தார். தொடர்ந்து நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்கம் சார்பில் ஊட்டியில் பருவநிலை மாற்றம் தொடர்பான கருத்தரங்கம் ஊட்டி

எச்.ஏ.டி.சி., பயிற்சி அரங்கில் நடந்தது. நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்க செயலாளர் ஆல்வாஸ் வரவேற்றார். நடைபயணத்தை நிறைவு செய்த புஷ்பநாத் தெரிவிக்கையில்: சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி நான் ஏற்கனவே கடந்த 2009ல் இங்கிலாந்தில் சுமார் 500 கி.மீ., தூர நடைபயணம் மேற்கொண்டேன். உலக அளவில் தற்போது சுற்றுச்சூழல் பாதிப்புகளால் பருவநிலை மாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். உலக அளவில் ஏற்படும் பருவநிலை மாற்றத்திற்கு வளர்ந்த நாடுகள் தான் காரணம். அவர்கள் தான் தொழில் முன்னேற்றம் என்ற பெயரில் மேற்கொள்ளும் தொழிற்சாலை புகை, ராசயன கழிவுகள், தூசு போன்றவற்றால் பருவநிலை மாற்றம் ஏற்படுகிறது. இதனால் பருவம் தவறிய மழை அல்லது வறட்சி போன்ற சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. மேலும் பழங்குடியினர் ஆராய்ச்சி மைய இயக்குநர் சுப்பிரமணியம் கூறுகையில்:

நீலகிரியில் வாழும் பழங்குடியின மக்கள் தங்களின் பாரம்பரிய உணவு பயிர்களை மீண்டும் பயிரிட ஆர்வம் காட்ட வேண்டும். இவற்றை திரும்ப மேற்கொண்டாலே பருவநிலை மாற்றத்தினை சாமளிக்க முடியும், என்றார். மத்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு மைய தலைவர் கோலா தெரிவிக்கையில் நம்மில் பலர் தெரிந்தும் தெரியாமலும் பருவநிலை மாற்றத்திற்கு காரணமான செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறோம். பருவநிலை மாற்றம் தற்போதைய சூழலில் உலகிற்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும், என்றார். இந்நிகழ்ச்சியில் தாவரவியல் பூங்கா உதவி இயக்குநர் உமாராணி, மூத்த விஞ்ஞானி கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் சம்பா நெற்பயிர்களைத் தாக்கும் குலைநோயை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் துறை ஆலோசனை**

அறந்தாங்கி, : ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் சம்பா நெற்பயிர்களைத் தாக்கும் குலைநோயை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. நடப்பு சம்பா நெற்பயிரில் காணப்படும்

குலைநோயை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் முத்தையா வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 16 ஆயிரம் எக்டேர் பரப்பில் நெற்பயில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெற்பயிரில் தற்போது நிலவும் மேகமூட்டம், தூரல், அதிகமான ஈரப்பதம், மற்றும் பனி குறைவான இரவு நேர வெப்பநிலை, மற்றும் அதிகமான தழைச்சத்து போன்றை குலை நோய் தோன்றுவதற்கான முக்கியமாக காரணிகளாகும். மேலும் நோய்க்காரணி பூஞ்சானம் நாற்றங்கால் தொடங்கி அனைத்து வளர்ச்சி பருவங்களிலும் நெற்பயிரை தாக்குகிறது. நெற்பயிரில் குலை நோய் தாக்கம் இலை, கதிரின் கழுத்து பகுதி, மற்றும் நெல் மணிகள் மீது அதிக அளவில் காணப்படும். இந்நோய் தாக்கப்பட்டால் ஆரம்ப நிலையில் இலையில் ஊதா கலந்த பச்சை நிறத்தில் சிறு புள்ளிகள் தோன்றி பின்னர் நீள் வடிவில் வளரும். நோய் வளர்ச்சி அடைந்த நிலையில் புள்ளிகள் வெண்மை கலந்த சாம்பல் நிற மையப்பகுதியையும், பழுப்பு நிற ஓரங்களையும் கொண்டு கண் வடிவில் காணப்படும். இதே போன்ற புள்ளிகள் இலை உறையின் மீதும், தண்டு பகுதியில் உள்ள கணுக்கள் மீதும் காணப்படும். இந்நோயை கட்டுப்படுத்த நோயற்ற பயிர்களிலிருந்து விதைகளை தேர்வு செய்ய வேண்டும். நடவு வயல்களில் நோயற்ற நாற்றுகளை நடவு செய்யவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்தை இடவேண்டும். தழைச்சத்தையே மூன்று முறையாக பிரித்து இடவேண்டும். ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது கார்பண்டாசின் 2 கிராம் ரசாயன பூஞ்சான கொல்லி மருந்தினை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். அல்லது விதைப்பதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் உயிரியல் மருந்தை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யவேண்டும். நடவு வயலில் மேங்கோசப் 2 கிராம் அல்லது கிட்டாசின் 1 மிலி, ஐசோ புரோதியலேன் அல்லது டிரைசைக்ளசோல் 1 கிராம் 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். நோய் எதிர்ப்பு திறன் கொண்ட ஆடுதுறை 39 போன்ற நெல் ரகங்களை பயிரிடலாம். மேலும் எளிதில் நோய் தாக்கும் சம்பா மசூரி (பிபிடி 5204) போன்ற ரகங்களை பயிரிடாமல் தவிர்க்கலாம். மேலும் இது சம்பந்தமாக சந்தேகங்களை

ஆவுடையார்கோவில் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி தெளிவுபடுத்தி கொள்ளலாம். இதனிடையே, ஆவுடையார்கோவில் வேளாண் விரிவாக்க மையத்தில் பயிர் பாதுகாப்பு மருந்துகள், நெல் நுண்சத்து மற்றும் உயிர் உரங்கள் ஆகியன போதிய அளவுக்கு இருப்பில் உள்ளதால், இவற்றை மானிய விலையில் விவசாயிகள் பெற்று பயனடையலாம்.இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வேளாண் பயிர்களில் பாதிப்பு ஏற்படும் அபாயம்**

புதுக்கோட்டை, : தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை கடந்த அக்டோபர் 28ம் தேதி முதல் பரவலாக விட்டுவிட்டுப் பெய்து வருகிறது. இதனால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் உள்ளிட்ட வட மாவட்டங்களிலும், கடலூர், தூத்துக்குடி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களிலும் கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதர மாவட்டங்களும் இம்மழையால் பாதிப்புக்கு உள்ளாகின. இதில் தலைநகர் சென்னையில் ஏற்பட்ட பேரழிவால் 50 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நிலைகுலைந்தனர். இதேபோல், புதுக்கோட்டை மாவட்டத்திலும் பரவலாக கன மழையும், சாரல் மழையும் மற்றும் விட்டுவிட்டு தூரலாகவும் பெய்தது. மணமேல்குடி உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த கனமழையால் மீனவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இலுப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் குடிசை வீடுகள் இடிந்து சேதமடைந்தன. இந்த வடகிழக்குப் பருவமழையால் நீர்வரத்து அதிகரித்தது. இதனால் ஒரு சில குளங்கள் நிரம்பியுள்ளன. இருப்பினும், இம்மழையால் சேதம் ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு மாவட்ட நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டது. இதனிடையே மழை காலம் இன்னும் நீடிப்பதால், மழையால் மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள விளை நிலங்களில் மழை நீர் புகுந்து பயிர்கள் சேதமடைய வாயப்புள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவ்வாறு மழைநீரால் வேளாண் பயிர்கள் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டால், இதுகுறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட அலுவலரிடம் உடனடியாக தெரிவிக்க முன்வருமாறு மாவட்ட நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

**நெற்பயிரில் இலைக்கருகல் நோய்**

கம்பம், : நெற்பயிரில், இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.கம்பம் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள சம்பா சாகுபடியில் ஒரு சில இடங்களில், நெற்பயிரில் பாக்டீரியா, இலைக்கருகல் நோய் தென்படுகிறது. நோய் தாக்குதல் அறிகுறி குறித்தும், கட்டுப்படுத்தும் முறை குறித்தும் கம்பம் வேளான்மை உதவி இயக்குநர் அசோகன் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.பாக்டீரியா, இலைக்கருகல் நோய் அறிகுறிகள்:இலைகள் மஞ்சள் நிறமாக மாறி கருகியது போல தெரியும். இந்த அறிகுறி நாற்று நட்ட 3 முதல் 4 வாரங்களில் தோன்றும். இலைகருகல் அறிகுறியின் ஆரம்ப நிலையில் லேசான பச்சை நிறத்தில் நீர் கசிவுள்ள அல்லது மஞ்சள் நிற புள்ளிகள், இலையின் நுனி மற்றும் விளிம்புகளில் காணப்படும். இதனால் இலை நுனி மற்றும் விளிம்பு காய்ந்து காணப்படுகிறது. பாக்டீரியா, இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்தும் முறைகள்: பரிந்துரை செய்யப்படும் யூரியாவை நான்கு முறையாக பிரித்து மேலுரமாக இடலாம். யூரியாவை ஜிப்சம் மற்றும் தூள் செய்த வேப்பம்பிண்ணாக்குடன் 5:4:1 என்ற விகிதத்தில் கலந்து ஒருநாள் வைத்திருந்து மறுநாள் மேல் உரமாக இடவேண்டும்.

ஐந்து சதவித வேப்பங்கொட்டைச்சாறு அல்லது 3 சதவித வேப்பெண்ணெய் கரைசலை நோய் தோன்றும் தருணத்திலும், 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம். ஹெக்டருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் 300 கிராம் மற்றும் காப்பர் ஆக்சி குளோரைடு ஒரு கிலோ என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**நெற்பயிருக்கு உரமிடும் பணி தீவிரம்**

கம்பம் பகுதியில் 2ம்போக நெற்பயிருக்கு உரமிடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 2ம்போக நெல் நடவுப்பணி முடிந்த நிலையில் தற்போது

அவற்றுக்கு உரமிடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நெற்பயிர்களுக்கு முதலாவதாக டிஏபி மற்றும் பாக்டம்பாஸ் உரங்களை கலந்து இடுவது மிகவும் அவசியம். இதனால் நெற்பயிர்கள் செழித்து வளரும். இந்நிலையில் மேற்கண்ட உரங்களின் விலை அதிகரித்துள்ளதுடன், ஒரு சில கடைகளில் பதுக்கி வைத்து விற்பனை செய்து வருவதால் விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், நெற்பயிர்கள் நல்ல முறையில் வளர்ந்து மகசூல் கிடைக்க வேண்டும் என்றால் அவ்வப்போது உரமிட்டு வர வேண்டும். ஆனால் உரங்களின் விலை நாளுக்கு நாள் எதிர்பாராத அளவு உயர்ந்து வருகிறது. கூட்டுறவு கடைகளில் மானிய விலையில் உரங்கள் வாங்க வேண்டும் என்றால் விவசாயிகளிம் சிட்டா, அடங்கல் உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களை கேட்கின்றனர். இதனால் பெரும்பாலான விவசாயிகள் தனியார் கடைகளிலேயே உரங்களை வாங்கும் நிலை உள்ளது.தனியார் கடைகளில் தற்போது டிஏபி மூடை ரூ.1250 வரையிலும், பாக்டம்பாஸ் ரூ.1000 வரையிலும் மற்றும் பொட்டாஷ் ரூ.800 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் சிரமமடைந்து வருகிறோம். தமிழக அரசு மானிய விலையில் உரங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**விவசாயிகள் விதைகளை பரிசோதனை செய்து பயிரிட்டால் நல்ல லாபம் பெற முடியும்**

வசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்து அதன் தரத்திற்கேற்ப விதைத்தால் நல்ல விளைச்சல் பெறலாம் என வேளாண்மை அலுவலர் தெரிவித்துள்ளார். வேளாண்மை அலுவலர் லாவண்யா ஜெயசுதா கூறியிருப்பதாவது: ஊட்டி ரோஜா பூங்கா அருகே தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் விதை பரிசோதனை நிலையம் உள்ளது. விதைப்பரிசோதனை நிலையத்தில் இம்மாவட்டத்தில் விளையக்கூடிய கேரட், பீட்ரூட், பீன்ஸ், காலிபிளவர், முட்டைகோஸ், முள்ளங்கி, டர்னிப், கோதுமை, பாலக் கீரை போன்ற விதைகளில் முளைப்பு திறன் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. விதைப்பரிசோதனை நிலையத்தில் இரண்டு

வகையான மாதி◌ா◌ிகள் பெறப்படுகின்றன. விதை ஆய்வாளர் மூலம் விற்பனை நிலையங்களில் இருந்து எடுக்கப்படும் விதை மாதி◌ா◌ிகள். விதை விற்பனையாளர் மற்றும் விவசாயிகளிடம் இருந்து பெறப்படும் பணி விதை மாதி◌ா◌ிகள் என இருவகைப்படும். பணி விதை மாதி◌ா◌ிகள் பா◌ிசோதனைக்கு ரூ.30 செலுத்த வேண்டும். கேரட் மற்றும் பீட்ரூட் விதைகளின் முளைப்பு திறன் 60 சதவீதம் காணப்பட்டால் தரமான விதையாகும். பா◌ிசோதனை முடிவுகள் 7 முதல் 14 நாட்களுக்குள் அளிக்கப்படும். பீன்ஸ் மற்றும் பட்டாணி விதைகளின் முளைப்பு திறன் 75 சதவீதம் காணப்பட வேண்டும். பா◌ிசோதனை முடிவுகள் 5 முதல் 9 நாட்களுக்குள் அளிக்கப்படும். நூல்கோல், முள்ளங்கி, முட்டைகோஸ் விதைகளின் முளைப்பு திறன் 70 சதவீதம் ஆகவும், காலிபிளவா◌ில் 65 சதவீதம் முளைப்பு திறனும் காணப்பட வேண்டும். பா◌ிசோதனை முடிவுகள் 4 முதல் 10 நாட்களுக்குள் அறிவிக்கப்படும். எனவே விவசாயிகள் விதைகளின் தரம் அறிந்து பயி◌ா◌ிட்டு அதிக மகசூல் பெறலாம்.

**சம்பா நெற்பயிர்களில் குலைநோய் கட்டுப்படுத்த வழிகாட்டல்**

சம்பா நெற்பயிர்களைத் தாக்கும் குலைநோயை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. நடப்பு சம்பா பருவத்தில் நெற்பயிரில் தற்போது நிலவும் மேகமூட்டம், தூரல், அதிகமான ஈரப்பதம், மற்றும் பனி குறைவான இரவு நேர வெப்பநிலை, மற்றும் அதிகமான தழைச்சத்து போன்றை குலை நோய் தோன்றுவதற்கான முக்கியமாக காரணிகளாகும். மேலும் நோய்க்காரணி பூஞ்சானம் நாற்றங்கால் தொடங்கி அனைத்து வளர்ச்சி பருவங்களிலும் நெற்பயிரை தாக்குகிறது. நெற்பயிரில் குலை நோய் தாக்கம் இலை, கதிரின் கழுத்து பகுதி, மற்றும் நெல் மணிகள் மீது அதிக அளவில் காணப்படும். இந்நோயை கட்டுப்படுத்த நோயற்ற பயிர்களிலிருந்து விதைகளை தேர்வு செய்ய வேண்டும். நடவு வயல்களில் நோயற்ற நாற்றுகளை நடவு செய்யவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்தை இடவேண்டும். தழைச்சத்தையே மூன்று முறையாக பிரித்து இடவேண்டும். ஒரு கிலோ விதைக்கு திரம் அல்லது கார்பண்டாசின் 2 கிராம் ரசாயன பூஞ்சான கொல்லி மருந்தினை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய

வேண்டும். அல்லது விதைப்பதற்கு முன் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் உயிரியல் மருந்தை பயன்படுத்தி விதை நேர்த்தி செய்யவேண்டும். நடவு வயலில் மேங்கோசப் 2 கிராம் அல்லது கிட்டாசின் 1 மிலி, ஐசோ புரோதியலேன் அல்லது டிரைசைக்ளசோல் 1 கிராம் 1 லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.